# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

### சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

### பன்னிரண்டாம் திருமுறை

#### இரண்டாம் காண்டம்

# 7 வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------



| Periya puranam text | | | |
|---|---|---|---|
| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |

| | | | |
|---|---|---|---|
| 4 | mummaiyAl ulakANDa carukkam | மும்மையால் உலகாண்ட சருக்கம் | PDF |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


7 வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

34 சாக்கிய நாயனார் புராணம்

1. அறு சமயத் தலைவராய் நின்றவருக்கு அன்பராய் 3636-1
மறு சமயச் சாக்கியர்தம் வடிவினால் வரும் தொண்டர் 3636-2
உறுதிவரச் சிவலிங்கம் கண்டு உவந்து கல் எறிந்து 3636-3
மறுவில் சரண் பெற்ற திறம் அறிந்தபடி வழுத்துவாம் 3636-4

2. தாளாளர் திருச்சங்க மங்கையினில் தகவு உடைய 3637-1
வேளாளர் குலத்து உதித்தார் மிக்க பொருள் தெரிந்து உணர்ந்து 3637-2
கேள் ஆகிப் பல் உயிர்க்கும் அருள் உடையார் ஆய்க் கெழுமி 3637-3
நீளாது பிறந்து இறக்கும் நிலை ஒழிவேன் என நிற்பார் 3637-4

3. அந் நாளில் எயில் காஞ்சி அணிநகரம் சென்று அடைந்து 3638-1
நல்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார் 3638-2
முன் ஆகச் சாக்கியர் தாம் மொழி அறத்தின் வழி சார்ந்து 3638-3
மன்னாத பிறப்பு அறுக்கும் தத்துவத்தின் வழி உணர்வார் 3638-4

4. அந் நிலைமைச் சாக்கியர்தம் அரும் கலை நூல் ஓதி அது 3639-1

தன் நிலையும் புறச் சமயச் சார்வுகளும் பொருள் அல்ல 3639-2
என்னும் அது தெளிந்து ஈசர் அருள் கூட ஈறு இல் சிவ 3639-3
நல் நெறியே பொருள் ஆவது என உணர்வு நாட்டுவார் 3639-4

5. செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும் 3640-1
மெய் வகையால் நான்கு ஆகும் விதித்த பொருள் எனக் கொண்டே 3640-2
இவ் இயல்பு சைவநெறி அல்ல வற்றுக்கு இல்லை என 3640-3
உய்வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்தார் 3640-4

6. எந் நிலையில் நின்றாலும் எக் கோலம் கொண்டாலும் 3641-1
மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள் என்றே 3641-2
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே தூய சிவம் 3641-3
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார் 3641-4

7. எல்லாம் உடைய ஈசனே இறைவன் என்ன அறியாதார் 3642-1
பொல்லா வேடச் சாக்கியரே ஆகிப் புல்லர் ஆகுவார் 3642-2
அல்லார் கண்டர் தமக்கு இந்த அகிலம் எல்லாம் ஆள் என்ன 3642-3
வல்லார் இவர் அவ் வேடத்தை மாற்றாது அன்பின் வழிநிற்பார் 3642-4

8. காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் 3643-1
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறி ஆம் சிவலிங்கம் 3643-2
நாணாது நேடியமால் நான் முகனும் காண நடுச் 3643-3
சேண் ஆரும் தழல் பிழம்பாய்த் தோன்றிது தெளிந்தார் ஆய் 3643-4

9. நாள் தோறும் சிவலிங்கம் கண்டு உண்ணும் அது நயந்து 3644-1
மாடு ஓர் வெள் இடை மன்னும் சிவலிங்கம் கண்டு மனம் 3644-2
நீடு ஓடு களி உவகை நிலைமை வரச் செயல் அறியார் 3644-3
பாடு ஓர் கல் கண்டு அதனைப் பதைப்போடும் எடுத்து எறிந்தார் 3644-4

10. அகம் நிறைந்த பேர் உவகை அடங்காத ஆதரவால் 3645-1
மகவு மகிழ்ந்து உவப்பார்கள் வன்மை புரிசெயலினால் 3645-2
இகழ்வனவே செய்தாலும் இளம் புதல்வர்க்கு இன்பமே 3645-3
நிகழும் அது போல் அதற்கு நீள் சடையார் தாம் மகிழ்வார் 3645-4

11. அன்றுபோய் பிற்றைநாள் அந்நியதிக்கு அனையுங்கால் 3646-1
கொன்றை முடியார் மேல் தாம் கல் எறிந்த குறிப்புஅதனை 3646-2
நின்று உணர்வார் எனக்கு அப்போது இது நிகழ்ந்தது அவர் அருளே 3646-3
என்று அதுவே தொண்டு ஆக என்றும் அது செய நினைந்தார் 3646-4

12. தொடங்கிய நாள் அருளிய அத்தொழில் ஒழியா வழிதொடரும் 3647-1
கடன் புரிவார் அது கண்டு கல் எறிவார் துவர் ஆடைப் 3647-2
படம் புனை வேடம் தவிரார் பசுபதியார் தம் செயலே 3647-3
அடங்கலும் என்பது தெளிந்தார் ஆதலினால் மாதவர்தாம் 3647-4

13. இந் நியதி பரிவோடும் வழுவாமல் இவர் செய்ய 3648-1
முன்னும் திருத்தொண்டர் நிலை முடிந்தபடி தான் மொழியில் 3648-2
துன்னிய மெய் அன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு 3648-3
மன்னு மிகு பூசனை ஆம் அன்பு நெறி வழக்கினால் 3648-4

14. கல்லாலே எறிந்த அதுவும் அன்பு ஆன படி காணில் 3649-1
வில்வேடர் செருப்பு அடியும் திருமுடியில் மேவிற்று ஆல் 3649-2
நல்லார் மற்று அவர் செய்கை அன்பாலே நயந்து அதனை 3649-3
அல்லாதார் கல் என்பார் அரனார்க்கு அஃது அலராம் ஆல் 3649-4

15. அங்கு ஒரு நாள் அருளாலே அயர்ந்து உண்ணப் புகுகின்றார் 3650-1
எங்கள் பிரான் தனை எறியாது அயர்ந்தேன் யான் என எழுந்து 3650-2
பொங்கியது ஓர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு 3650-3
வெம் கறியின் உரி புனைந்தார் திருமுன்பு மேவினார் 3650-4

16. கொண்டது ஒருகல் எடுத்துக் குறிகூடும் வகை எறிய 3651-1
உண்டி வினை ஒழித்து அஞ்சி ஓடி வரும் வேட்கை ஓடும் 3651-2
கண்டு அருளும் கண்ணுதலார் கருணை பொழிதிருநோக்கால் 3651-3
தொண்டர் எதிர் நெடும் விசும்பில் துணைவி ஓடும் தோன்றினார் 3651-4

17. மழ விடைமேல் எழுந்து அருளி வந்த ஒரு செயலாலே 3652-1
கழல் அடைந்த திருத்தொண்டர் கண்டு கரம் குவித்து இறைஞ்சி 3652-2
விழ அருள் நோக்கு அளித்து அருளிமிக்க சிவலோகத்தில் 3652-3
பழ அடிமைப் பாங்கு அருளிப் பரமர் எழுந்து அருளினார் 3652-4

18. ஆதியார் தம்மை நாளும் கல் எறிந்து அணுகப் பெற்ற 3653-1
கோது இல் சீர்த் தொண்டர் கொண்ட குறிப்பினை அவர்க்கு நல்கும் 3653-2
சோதியார் அறிதல் அன்றித் துணிவது என் அவர்தான் சூடித் 3653-3
தீதினை நீக்கல் உற்றேன் சிறப்புலியாரைச் செப்பி 3653-4

## 35 சிறப்புலி நாயனார் புராணம்

1. பொன்னி நீர் நாட்டின் நீடும் பொன் பதி புவனத்து உள்ளோர் 3654-1
இன்மை ஆல் இரந்து சென்றோர்க்கு இல்லை என்னாதே ஈயும் 3654-2
தன்மையார் என்று நன்மை சார்ந்த வேதியரைச் சண்பை 3654-3
மன்னன் ஆர் அருளிச்செய்த மறைத் திரு ஆக்கூர் அவ்வூர் 3654-4

2. தூ மலர்ச் சோலை தோறும் சுடர் தொடுமாடம் தோறும் 3655-1
மா மழை முழக்கம் தாழ மறை ஒலி முழக்கம் ஓங்கும் 3655-2
பூ மலி மறுகில் இட்ட புகை அகில் தூபம் தாழ 3655-3
ஓம நல் வேள்விச் சாலை ஆகுதித் தூபம் ஓங்கும் 3655-4

3. ஆலை சூழ் பூக வேலி அத்திரு ஆக்கூர் தன்னில் 3656-1
ஞாலம் ஆர் புகழின் மிக்கார் நான் மறைக் குலத்தில் உள்ளார் 3656-2
நீலம் ஆர் கண்டத்து எண் தோள் நிருத்தர்தம் திருத்தொண்டு ஏற்ற 3656-3
சீலராய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார் 3656-4

4. ஆளும் அம் கணருக்கு அன்பர் அணைந்த போது அடியில் தாழ்ந்து 3657-1
மூளும் ஆதரவு பொங்க முன்பு நின்று இனிய கூறி 3657-2
நாளும் நல் அமுதம் ஊட்டி நயந்தன எல்லாம் நல்கி 3657-3
நீளும் இன்பத்து உள் தங்கி நிதிமழை மாரி போன்றார் 3657-4

5. அஞ்சு எழுத்து ஓதி அங்கி வேட்டு நல் வேள்வி எல்லாம் 3658-1
நஞ்சு அணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்து 3658-2
எஞ்சல் இல் அடியார்க்கு என்றும் இடை அறா அன்பால் வள்ளல் 3658-3
தம் செயல் வாய்ப்ப ஈசர் தாள் நிழல் தங்கினார் ஏ 3658-4

6. அறத்தினில் மிக்க மேன்மை அந்தணர் ஆக்கூர் தன்னில் 3659-1
மறைப் பெரும் வள்ளலார் வண் சிறப்புலி யார் தாள் வாழ்த்திச் 3659-2
சிறப்பு உடைத் திருச் செங்காட்டங் குடியினில் செம்மை வாய்ந்த 3659-3
வீரர் சிறுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்பல் உற்றேன் 3659-4

## 36 சிறுத்தொண்ட நாயனார் புராணம்

1. உரு நாட்டும் செயல் காமன் ஒழிய விழிபொழி செம்தீ 3660-1
வரும் நாட்டத் திருநுதலார் மகிழ்ந்து அருளும் பதிவயலில் 3660-2
கருநாட்டக் கடைசியர் தம் களி நாட்டும் காவேரித் 3660-3
திரு நாட்டு வளம் காட்டும் செங்காட்டக் குடி ஆகும் 3660-4

2. நிலவிய அத் திருப்பதியில் நெடும் சடையார் நீற்று அடைவால் 3661-1
உலகில் வளர் உயிர்க்கு எல்லாம் உயர் காவல் தொழில் பூண்டு 3661-2
மலர் புகழ் மா மாத்திரர் தம் குலம் பெருக வந்து உள்ளார் 3661-3

பலர் புகழும் திருநாமம் பரஞ்சோதியார் என்பார் 3661-4

3. ஆயுள் வேதக் கலையும் அலகு இல் வடநூல் கலையும் 3662-1
தூய படைக்கலத் தொழிலும் துறை நிரம்பப் பயின்று அவற்றால் 3662-2
பாயும் மதக் குஞ்சரம் உம் பரியும் உகைக்கும் பண்பு 3662-3
மேய தொழில் விஞ்சையிலும் மேதினி இல் மேல் ஆனார் 3662-4

4. உள்ளம் நிறை கலைத்துறைகள் ஒழிவு இன்றி பயின்று அவற்றால் 3663-1
தெள்ளி வடித்து அறிந்த பொருள் சிவன் கழலில் செறிவு என்றே 3663-2
கொள்ளும் உணர்வினில் முன்னே கூற்று உதைத்த கழற்கு அன்பு 3663-3
பள்ளம் மடையாய் என்றும் பயின்று வரும் பண்பு உடையார் 3663-4

5. ஈசன் அடியார்க்கு என்றும் இயல்பான பணி செய்தே 3664-1
ஆசு இல் புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்கு ஆகப் 3664-2
பூசல் முனைக் களிறு உகைத்து போர் வென்று பொரும் அரகர் 3664-3
தேசங்கள் பல கொண்டு தேர்வேந்தன் பால் சிறந்தார் 3664-4

6. மன்னவர்க்குத் தண்டு போய் வடபுலத்து வாதாவித் 3665-1
தொன் நகரம் துகள் ஆகத் துனைகெடும் கை வரை உகைத்துப் 3665-2
பல் மணியும் நிதிக் குவையும் பகட்டு இனமும் பரித் தொகையும் 3665-3
இன்னை எண் இல் அளவாக கவர்ந்தே இகல் அரசன் முன் கொணர்ந்தார் 3665-4

7. கதிர் முடி மன்னனும் இவர் தம் களிற்று உரிமை ஆண்மையினை 3666-1
அதிசயித்துப் புகழ்ந்து உரைப்ப அறிந்த அமைச்சர்களுக்கு உரைப்பார் 3666-2
மதி அணிந்தார் திருத்தொண்டு வாய்த்தலி உடைமையினால் 3666-3
எதிரி இவருக்கு இவ் உலகில் இல்லை என எடுத்து உரைத்தார் 3666-4

8. தம் பெருமான் திருத்தொண்டர் எனக் கேட்ட தார் வேந்தன் 3667-1
உம்பர் பிரான் அடியாரை உணராதே கெட்டு ஒழிந்தேன் 3667-2
வெம்பு கொடும் போர் முனையில் விட்டு இருந்தேன் எனவெரு உற்று 3667-3
எம் பெருமான் இது பொறுக்க வேண்டும் என இறைஞ்சினான் 3667-4

9. இறைஞ் சுதலும் முன் இறைஞ்சி என் உரிமைத் தொழிற்கு அடுத்த 3668-1
திறம் புரிவேன் அதற்கு என்னோ தீங்கு என்ன ஆங்கு அவர்க்கு 3668-2
நிறைந்த நிதிக்குவை உடன் நீடு விருத்திகள் அளித்தே 3668-3
அறம் புரி செம் கோல் அரசன் அஞ்சலி செய்து உரைக்கின்றான் 3668-4

10. உம்முடைய நிலைமையினை அறியாதே கொண்டு உய்த்தீர் 3669-1
எம் உடைய மனக் கருத்துக்கு இனிது ஆக இசைந்து உமது 3669-2
மெய்ம்மைபுரி செயல் விளங்க வேண்டியவாறே சரித்துச் 3669-3
செம்மை நெறி திருத்தொண்டு செய்யும் என விடை கொடுத்தான் 3669-4

11. மன்னவனை விடை கொண்டு தம்பதியில் வந்து அடைந்து 3670-1
பன்னு புகழ் பரஞ் சோதியார் தாமும் பனி மதி வாழ் 3670-2
சென்னியரைக் கணபதி ஈச்சரத்து இறைஞ்சித் திருத்தொண்டு 3670-3
முன்னை நிலைமையில் வழுவா முறை அன்பில் செய்கின்றார் 3670-4

12. வேத காரணர் அடியார் வேண்டிய மெய்ப் பணி செய்யத் 3671-1
தீது இல் குடிப் பிறந்தார் திருவெண்காட்டு நங்கை எனும் 3671-2
காதல் மனைக் கிழத்தியார் கருத்து ஒன்ற வரும் பெருமை 3671-3
நீதி மனை அறம் புரியும் நீர்மையினை நிலை நிற்பார் 3671-4

13. நறை இதழித் திரு முடியார் அடியாரை நாள் தோறும் 3672-1
முறைமையினில் திரு அமுது முன் ஊட்டிப் பின் உண்ணும் 3672-2
நிறை உடைய பெருவிருப்பில் நியதி ஆகக் கொள்ளும் 3672-3
துறை வழுவா வகை ஒழுகும் தூய தொழில் தலை நின்றார் 3672-4

14. தூய திரு அமுது கனி கன்னல் அறுசுவைக் கறிநெய் 3673-1

பாய தயிர் பால் இனிய பண்ணியம் உண் நீர் அமுதம் 3673-2
மேய படி ஆல் அமுது செய்விக்க இசைந்து அடியார் 3673-3
மா இரு ஞாலம் போற்ற வரும் இவர் பால் மனம் மகிழ்ந்தார் 3673-4

15. சீதமதி அரவின் உடன் செம் சடைமேல் செறிவித்த 3674-1
நாதன் அடியார் தம்மை நயப்பாட்டு வழி பாட்டால் 3674-2
மே தகையார் அவர் முன்புமிகச் சிறியர் ஆய் அடைந்தார் 3674-3
ஆதலினால் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார் அவனியின் மேல் 3674-4

16. கண் நுதலார் கணபதீச்சரத்தின் கண் கருத்து அமர 3675-1
உள் நிறை அன்பினில் பணி செய்து ஒழுவார் வழுவு இன்றி 3675-2
எண் இல் பெரும் சீர் அடியார் இடை விடாது அமுதுசெய 3675-3
நண்ணிய பேர் உவகையுடன் நயந்து உறையும் நாளின் கண் 3675-4

17. நீர் ஆரும் சடை முடியார் அருளினால் நிறை தவத்துப் 3676-1
பேராளர் அவர் தமக்குப் பெருகுதிரு மனை அறத்தின் 3676-2
வேர் ஆகி விளங்கும் திரு வெண்காட்டு நங்கைபால் 3676-3
சீர் ஆளத் தேவர் எனும் திருமைந்தர் அவதரித்தார் 3676-4

18. அருமை இனில் தனிப் புதல்வர் பிறந்த பொழுது அலங்கரித்த 3677-1
பெருமை இனில் கிளை களிப்பப் பெறற்கு அரிய மணிபெற்று 3677-2
வரும் மகிழ்ச்சி தாதையார் மனத்து அடங்காவை வளரத் 3677-3
திருமலி நெய் ஆடல் விழாச் செங்காட்டங்குடி எடுப்ப 3677-4

19. மங்கல நல் இயம் முழக்கம் மறை முழக்கம் வான் அளப்ப 3678-1
அம் கணர் தம் சீர் அடியார்க்கு அளவு இறந்த நிதி அளித்துத் 3678-2
தங்கள் மரபினில் உரிமை சடங்கு தச தினத்தினிலும் 3678-3
பொங்கு பெரு மகிழ்ச்சியுடன் புரிந்து காப்பு அணிபுணைந்தார் 3678-4

20. ஆர்வம் நிறை பெரும் சுற்றம் அகம் மலர அளித்தவர் தாம் 3679-1
பார் பெருகும் மகிழ்ச்சி உடன் பருவ முறைப் பாராட்டுச் 3679-2
சீர் பெருகச் செய்ய வளர் திருமனார் சீறர் அடியில் 3679-3
தார் வளர் கிண்கிணி அசையத் தளர் நடையின் பதம் சார்ந்தார் 3679-4

21. சுருளும் மயிர் நுதல் சுட்டி துணைக் காதின் மணிக் குதம்பை 3680-1
மருவு திருக்கண்ட நாண் மார்பினில் ஐம்படைக் கையில் 3680-2
பொருவு இல் வயிரச் சரிகள் பொன் அரைஞாண் புனை சதங்கை 3680-3
தெருவு இல் ஒளி விளங்க வளர் திருவிளையாட்டினில் அமர்ந்தார் 3680-4

22. வந்து வளர் மூ ஆண்டில் மயிர் வினை மங்கலம் செய்து 3681-1
தந்தையரும் பயந்த தாயாரும் தனிச்சிறுவர் 3681-2
சிந்தை மலர் சொல் தெளிவித்தே செழும் கலைகள் பயிலத்தம் 3681-3
பந்தம் அற வந்து அவரைப் பள்ளியினில் இருத்தினார் 3681-4

23. அந் நாளில் சண்பை நகர் ஆண்தகையார் எழுந்து அருள 3682-1
முனாக எதிர்கொண்டு கொடு புகுந்து முந்நூல் சேர் 3682-2
பொன் மார்பில் சிறுத் தொண்டர் புகலிகாவனார்தம் 3682-3
நல் நமச் சேவடிகள் போற்றி இசைத்து நலம் சிறந்தார் 3682-4

24. சண்பையர் தம் பெருமானும் தாங்க அரிய பெரும் காதல் 3683-1
பண்பு உடைய சிறுத்தொண்டர் உடன் பயின்று மற்று அவரை 3683-2
மண் பரவும் திருப்பதிகத்தினில் வைத்துச் சிறப்பித்து 3683-3
நண்பர் உளி எழுந்து அருளத் தாம் இனிது நயப்பு உற்றார் 3683-4

25. இத்தன்மை நிகழும் நாள் இவர் திருத்தொண்டு இரும் கயிலை 3684-1
அத்தர் திரு அடி இணைக் கீழ்ச் சென்று அணைய அவர் உடைய 3684-2
மெய்த் தன்மை அன்பு நுகர்ந்து அருளுதற்கு விடையவர் தாம் 3684-3
சித்தம் மகிழ் வயிரவர் ஆய்த் திருமலையின் நின்று அணைகின்றார் 3684-4

26. மடல் கொண்ட மலர் இதழி நெடும்சடையை வனப்பு எய்தக் 3685-1
கடல் மண்டி முகந்து எழுந்த காள மேகச் சுருள் போல் 3685-2
தொடர் பங்கி சுருண்டு இருண்டு தூறி நெறித்து அசைந்து செறி 3685-3
படர் துஞ்சின் கரும் குஞ்சி கொந்தளம் ஆகப் பரப்பி 3685-4

27. அஞ்சனம் மஞ்சனம் செய்தது அனைய அணி கிளர் பம்பை 3686-1
மஞ்சின் இடைஎழுந்த வான மீன் பரப்பு என்னப் 3686-2
புஞ்ச நிரை வண்டு தேன் சுரும்பு புடை படர்ந்து ஆர்ப்பத் 3686-3
துஞ்சின் உனித்து தனிப் பரப்பும் தும்பை நறுமலர் தோன்ற 3686-4

28. அருகு திருமுடிச் செருகும் அந்தி இளம் பிறை தன்னைப் 3687-1
பெருகு சிறுமதி ஆக்கிப் பெயர்த்து சாத்தியது என்ன 3687-2
விரிசுடர் செம் பவள ஒளி வெயில் விரிக்கும் விளங்கு சுடர்த் 3687-3
திருநுதல் மேல் திருநீற்றுத் தனிப் பொட்டும் திகழ்ந்து இலங்க 3687-4

29. வெவ் அருக்கன் மண்டலமும் விளங்கு மதி மண்டலமும் 3688-1
அவ் அனல் செம்மண்டலமும் உடன் அணைந்தது என அழகை 3688-2
வவ்வும் திருக்காதின் மணிக் குழைச் சங்கு வளைத்து அதனுள் 3688-3
செவ்வரத்த மலர் செறித்த திருத்தோடு புடை சிறக்க 3688-4

30. களம் கொள் விடம் மறைத்து அருளக் கடல் அமுத குமிழிநிரைத் 3689-1
துளங்கு ஒளி வெண் திரட் கோவைத் தூய வடம் அணிந்தது என 3689-2
உளம் கொள்பவர் கரைந்து உடலும் உயிரும் உருகப் பெருக 3689-3
விளங்கும் திருக் கழுத்தின் இடைவெண் பளிங்கின் வடம் திகழ 3689-4

31. செம்பரிதி கடல் அளித்த செக்கர் ஒளியினை அந்திப் 3690-1
பம்பும் இருள் செறி பொழுது படர்ந்து அணைந்து சூழ்வது என 3690-2
உளம் கொள்பவர் கரைந்து உடலும் உயிரும் உருகப் பெருக 3690-3
விளங்கும் திரு கழுத்தின் இடை வெண் பளிங்கின் வடம் திக 3690-4

32. மிக்கு எழும் அன்பர்கள் அன்பு திருமேனி விளைந்தது என 3691-1
அக்குமணியால் சன்ன வீரமும் ஆரமும் வடமும் 3691-2
கைக்கு அணி கொள்வளைச்சரியும் அரைக் கடி சூத்திரச் சரியும் 3691-3
தக்க திருக்கால் சரியும் சாத்திய ஒண் சுடர் தயங்க 3691-4

33. பொருவு இல் திருத் தொண்டர்க்குப் புவிமேல் வந்து அருள் புரியும் 3692-1
பெருக அருளின் திறம் கண்டு பிரான் அருளே பேணுவீர் 3692-2
வரும் அன்பின் வழிநிற்பீர் என மறைபூண்டு அறைவனபோல் 3692-3
திருவடிமேல் திருச்சிலம்பு திசை முழுதும் செல ஒலிப்ப 3692-4

34. அயன் கபாலம் தரித்த இடத்திருக்கையால் அணைத்த 3693-1
வயங்கு ஒலி மூவிலைச்சூலம் மணித்திருத் தோள்மிசை பொலியத் 3693-2
தயங்கு சுடர் வலத்திருக்கை தமருகத்தின் ஒலிதழைப்பப் 3693-3
பயன் தவத்தால் பெறும் புவியும் பாத தாமரை சூட 3693-4

35. அருள்பொழியும் திருமுகத்தில் அணி முறுவல் நிலவு எறிப்ப 3694-1
மருள் பொழியும் மலம் சிதைக்கும் வடிசூலம் வெயில் எறிப்பப் 3694-2
பொருள் பொழியும் பெருகு அன்பு தழைத்து ஓங்கிப்புவி ஏத்தத் 3694-3
தெருள் பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டம் குடிசேர்ந்தார் 3694-4

36. தண்டாத ஒரு வேட்கைப் பசி உடையார் தமைப்போலக் 3695-1
கண்டாரைச் சிறுத் தொண்டர்மனை வினவிக் கடிது அணைந்து 3695-2
தொண்டனார்க்கு எந்நாளும் சோறு அளிக்கும் திருத்தொண்டர் 3695-3
வண்டார் பூம் தாரார் இம் இம் மனைக்கு உள்ளாரோ என்ன 3695-4

37. வந்து அணைந்து வினவுவார் மாதவரேயாம் என்று 3696-1
சந்தனம் ஆம் தையலார் முன்வந்து தாள் வணங்கி 3696-2

அந்தம் இல் சீர் அடியாரைத் தேடி அவர் புறத்து அணைந்தார் 3696-3
எம்தமை ஆள் உடையீரே அகத்து எழுந்து அருளும் என 3696-4

38. மடவரலை முகம் நோக்கி மாதரார் தாம் இருந்த 3697-1
இடவகையில் தனிபுகுதோம் என்று அருள அதுகேட்டு 3697-2
விட அகல்வார் போல் இருந்தார் என வெருவி விரைந்து மனைக் 3697-3
கடன் உடைய திருவெண்காட்டு அம்மை கடைத்தலை எய்தி 3697-4

39. அம்பலவர் அடியாரை அமுது செய்விப்பார் இற்றைக்கு 3698-1
எம் பெருமான் யாவரையும் கண்டிலர் தேடிப் போனார் 3698-2
வம்பென நீர் எழுந்து அருளி வரும் திருவேடம் கண்டால் 3698-3
தம் பெரிய பேறு என்றே மிக மகிழ்வார் இனித்தாழார் 3698-4

40. இப்பொழுதே வந்து அணைவர் எழுந்து அருளி இரும் என்ன 3699-1
ஒப்பு இல் மனை அறம் புரப்பீர் உத்தரா பதி உள்ளோம் 3699-2
செப்ப அரும் சீர் சிறுத்தொண்டர் தமைக் காணச் சேர்ந்தனம் யாம் 3699-3
எப்பரிசும் அவர் ஒழிய இங்கு இரோம் என்று அருளி 3699-4

41. கண்நுதலில் காட்டாதார் கணபதீச் சரத்தின் கண் 3700-1
வண்ணமலர் ஆத்தியின் கீழ் இருக்கின்றோம் மற்று அவர்தாம் 3700-2
நண்ணினால் நாம் இருந்த பரிசு உரைப்பீர் என்று அருளி 3700-3
அண்ணலார் திரு ஆத்தி அணைந்து அருளி அமர்ந்திருந்தார் 3700-4

42. நீர் ஆர் சடையான் அடியாரை நேடி எங்கும் காணாது 3701-1
சீர் ஆர் தவத்துச் சிறுத்தொண்டர் மீண்டும் செல்வமனை எய்தி 3701-2
ஆரா இன்ப மனைவியார்க்கு இயம்பி அழிவு எய்திட அவரும் 3701-3
பாரா தரிக்கும் திருவேடத்து ஒருவர் வந்தபடி பகர்ந்தார் 3701-4

43. அடியேன் உய்ந்தேன் எங்கு உற்றார் உரையாய் என்ன அவர் மொழிவார் 3702-1
வடி சேர் சூல கபாலத்தார் வட தேசத்தோம் என்றார் வண் 3702-2
துடிசேர் கரத்துப் பயிரவர் யாம் சொல்ல இங்கும் இராதே போய்க் 3702-3
கடிசேர் திரு ஆத்தியின் நிழல்கீழ் இருந்தார் கணபதீச் சரத்து 3702-4

44. என்று மனைவியார் இயம்ப எழுந்த விருப்பால் விரைந்து எய்திச் 3703-1
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றார் சிறுத்தொண்டர் 3703-2
நின்ற தொண்டர் தமை நோக்கி நீரோ பெரிய சிறுத்தொண்டர் 3703-3
என்று திருவாய் மலர்ந்து அருள இறைவர் தம்மைத் தொழுது உரைப்பார் 3703-4

45. பூதி அணி சாதனத்தவர் முன் போற்றப் போதேன் ஆயிடினும் 3704-1
நாதன் அடியார் கருணையினால் அருளிச் செய்வார் நான் என்று 3704-2
கோது இல் அன்பர் தமை அமுது செய்விப்பதற்குக் குலப்பதியில் 3704-3
காதலாலே தேடியும் முன் காணேன் தவத்தால் உமைக் கண்டேன் 3704-4

46. அடியேன் மனையில் எழுந்து அருளி அமுது செய்ய வேண்டும் என 3705-1
நெடியோன் அறியா அடியார்தாம் நிகழும் தவத்தீர் உமைக் காணும் 3705-2
படியால் வந்தோம் உத்தர பதியோம் எம்மைப் பரிந்து ஊட்ட 3705-3
முடியாது நுமக்குச் செய்கை அரிது ஒண்ணா என்று மொழிந்து அருள 3705-4

47. எண்ணா அடியேன் மொழியேன் நீர் அமுது செய்யும் இயல்பு அதனைக் 3706-1
கண்ணார் வேடம் நிறை தவத்தீர் அருளிச் செய்யும் கடிது அமைக்க 3706-2
தண் ஆர் இதழி முடியார் தம் அடியார் தலைப்பட்டால் தேட 3706-3
ஒண்ணாதனவும் உளவாகும் அருமை இல்லை என உரைத்தார் 3706-4

48. அரியது இல்லை எனக் கேட்ட பொழுதில் அழகு பொழிகின்ற 3707-1
பெரிய பயிரவக் கோலப் பெருமான் அருளிச் செய்வார் யாம் 3707-2
புரியும் தொண்டீர் மூ இருது கழித்தால் பசு வீழ்த்திட உண்பது 3707-3
உரிய நாளும் அதற்கு இன்று ஆல் ஊட்ட அரிதாம் உமக்கு என்றார் 3707-4

49.  சால நன்று முந் நிரையும் உடையேன் தாழ்வு இங்கு எனக்கு இல்லை 3708-1
ஆலம் உண்டார் அன்பர் உமக்கு அமுதாம் பசுத்தான் இன்னது என 3708-2
ஏல அருளிச் செயப் பெற்றால் யான் போய் அமுது கடிது அமைத்துக் 3708-3
காலம் தப்பாமே வருவேன் என்று மொழிந்து கை தொழுதார் 3708-4

50. பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும் 3709-1
நண்பு மிக்கீர் நாம் உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசு ஆம் 3709-2
உண்பது ஐஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறு இன்றேல் இன்னம் 3709-3
புண் செய் நோவில் வேல் எறிந்தால் போலும் புகல்வது ஒன்று என்றார் 3709-4

51.  யாதும் அரியது இல்லை இனி ஈண்ட அருளிச் செய்யும் என 3710-1
நாதன் தானும் ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத் 3710-2
தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனம் உவந்தே 3710-3
ஏதம் இன்றி அமைத்த கறி ஆம் இட்டு உண்பது என மொழிந்தார் 3710-4

52. அதுவும் முனைவர் மொழிந்து அருளக் கேட்ட தொண்டர் அடியேனுக்கு 3711-1
இதுவும் அரிது அன்று எம்பெருமான் அமுது செய்யப் பெறில் என்று 3711-2
கதும் என்று விரைவில் அவர் அவர் இசையப் பெற்றுக் களிப்பால் காதல் ஒடு 3711-3
மதுமென் கமல மலர்ப் பாதம் பணிந்து மனையில் வந்து அணைந்தார் 3711-4

53. அன்பு மிக்க பெரும் கற்பின் அணங்கு திரு வெண் காட்டு அம்மை 3712-1
முன்பு வந்து சிறுத் தொண்டர் வரவு நோக்கி முன் நின்றே 3712-2
இன்பம் பெருக மலர்ந்த முகம் கண்டு பாதம் மிசை இறைஞ்சிப் 3712-3
பின்பு கணவர் முகம் நோக்கிப் பெருகும் தவத்தோர் செயல் வினவ 3712-4

54. வள்ளலாரும் மனையாரை நோக்கி வந்த மாதவர் தாம் 3713-1
உள்ளம் மகிழ அமுது செய இசைந்தார் குடிக்கு ஓர் சிறுவனும் ஆய் 3713-2
கொள்ளும் பிராயம் ஐந்து உளன் ஆய் உறுப்பில் குறைபாடு இன்றித்தாய் 3713-3
பிள்ளை பிடிக்க உவந்து பிதா அரிந்து சமைக்கப் பெறின் என்றார் 3713-4

55. அரிய கற்பின் மனைவியார் அவரை நோக்கி உரை செய்வார் 3714-1
பெரிய பயிரவத் தொண்டர் அமுது செய்யப் பெறுவதற்கு இங்கு 3714-2
உரிய வகையில் அமுது அமைப்போம் ஒருவன் ஆகி ஒரு குடிக்கு 3714-3
வரும் அச்சிறுவன் தனைப் பெறுமாறு எவ்வாறு என்று வணங்குதலும் 3714-4

56. மனைவியார் தம் முகம் நோக்கி மற்று இத் திறத்து மைந்தர் தமை 3715-1
நினைவு நிரம்ப நிதி கொடுத்தால் தருவார் உளரே நேர் நின்று 3715-2
தனையன் தன்னைத் தந்தை தாய் அரிவார் இல்லைத் தாழாமே 3715-3
எனை இங்கு உய்ய நீ பயந்தான் தன்னை அழப்போம் யாம் என்றார் 3715-4

57. என்று கணவர் கூறுதலும் அதனுக்கு இசைந்து எம்பிரான் தொண்டர் 3716-1
இன்று தாழாது அமுது செய்யப் பெற்று இங்கு அவர் தம் மலர்ந்த முகம் 3716-2
நன்று காண்பது என நயந்து நம்மைக் காக்க வரும் மணியை 3716-3
சென்று பள்ளியினில் கொண்டு வாரும் என்றார் திரு அனையார் 3716-4

58. காதல் மனையார் தாம் கூறக் கணவனாரும் காதலனை 3717-1
ஏதம் அகலப் பெற்ற பேறு எல்லாம் எய்தினால் போல 3717-2
நாதர் தமக்கு அங்கு அமுது ஆக்க நறும் மென் குதலை மொழிப் புதல்வன் 3717-3
ஓத அணைந்த பள்ளியினில் உடன் கொண்டு எய்தக் கடிது அகன்றார் 3717-4

59. பள்ளியினில் சென்று எய்துதலும் பாதச் சதங்கை மணி ஒலிப்ப 3718-1
பிள்ளை ஓடி வந்து எதிரே தழுவ எடுத்து இயல்பின் மேல் 3718-2
கொள்ள அணைத்துக் கொண்டு மீண்டு இல்லம் புகுதக் குலமாதர் 3718-3
வள்ளலார் தம் முன் சென்று மைந்தன் தன்னை எதிர் வாங்கி 3718-4

60. குஞ்சி திருத்தி முகம் துடைத்துக் கொட்டை அரை ஞாண் துகள் நீக்கி 3719-1
மஞ்சள் அழிந்த அதற்கு இரங்கி மையும் கண்ணின் மருங்கு ஒதுக்கிப் 3719-2
பஞ்சி அஞ்சும் மெல் அடியார் பரிந்து திருமஞ்சனம் ஆட்டி 3719-3

எஞ்சல் இல்லாக் கோலம் செய்து எடுத்துக் கணவர் கைக் கொடுத்தார் 3719-4

61. அச்சம் எய்திக் கறி அமுதாம் என்னும் அதனால் அரும் புதல்வன் 3720-1
உச்சி மோவார் மார்பின் கண் அணைத்தே முத்தம் தம் உண்ணார் 3720-2
பொச்சம் இல்லாத் திருத் தொண்டர் புனிதர் தமக்குக் கறி அமைக்க 3720-3
மெச்சும் மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டு அணைவார் 3720-4

62. ஒன்றும் மனத்தார் இருவர்களும் உலகர் அறியார் என மறைவில் 3721-1
சென்று புக்குப் பிள்ளைதனைப் பெற்ற தாயார் செழும் கலங்கள் 3721-2
நன்று கழுவிக் கொடு செல்ல நல்ல மகனை எடுத்து உலகை 3721-3
வென்ற தாதையார் தலையைப் பிடிக்க விரைந்து தாயார் 3721-4

63. இனிய மழலைக் கிண்கிணிக் கால் இரண்டும் மடியின் புடை இடுக்கிக் 3722-1
கனிவாய் மைந்தன் கை இரண்டும் கையால் பிடிக்கக் காதலனும் 3722-2
நனி நீடு உவகை உறுகின்றார் என்று மகிழ்ந்து நகை செய்யத் 3722-3
தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலை அரிவார் 3722-4

64. பொருவு இல் பெருமைப் புத்திரன் மெய்த் தன்மை அளித்தான் எனப் பொலிந்து 3723-1
மருவு மகிழ்ச்சி எய்த அவர் மனைவியாரும் கணவனார் 3723-2
அருமை உயிரை எனக்கு அளித்தான் என்று மிகவும் அகம் மலர 3723-3
இருவர் மனமும் பேர் உவகை எய்தி அரிய வினை செய்தார் 3723-4

65. அறுத்த தலையின் இறைச்சி திரு அமுதுக்கு ஆகாது எனக் கழித்து 3724-1
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையில் கொடுத்து மற்றை உறுப்பு 3724-2
இறைச்சி எல்லாம் கொத்தி அறுத்து எலும்பு மூளை திறந்து இட்டு 3724-3
கறிக்கு வேண்டும் பல காயம் அரைத்துக் கூட்டிக் கடிது அமைப்பார் 3724-4

66. மட்டு விரி பூம் குழல் மடவார் அடுப்பில் ஏற்றி மனம் மகிழ்ந்தே 3725-1
அட்ட கறியின் பதம் அறிந்து அங்கு இழிச்சி வேறு ஓர் அரும்கலத்துப் 3725-2
பட்ட நறையால் தாளித்துப் பலவும் மற்றும் கறி சமைத்துச் 3725-3
சட்ட விரைந்து போனகமும் சமைத்துக் கணவர் தமக்கு உரைத்தார் 3725-4

67. உடைய நாதர் அமுது செய உரைத்த படியே அமைவதற்கு 3726-1
அடையும் இன்பம் முன்னையிலும் ஆர்வம் பெருகிக் களி கூர 3726-2
விடையில் வருவார் தொண்டர் தாம் விரைந்து சென்று மெல் மலரின் 3726-3
புடைவண்டு அறையும் ஆத்தியின் கீழ் இருந்த புனிதர் முன் சென்றார் 3726-4

68. அண்ணல் திரு முன்பு அணைந்து இறைஞ்சி அன்பர் மொழிவார் அடியேன்பால் 3727-1
நண்ணி நீர் இங்கு அமுது செய்ய வேண்டும் என்று நான் பரிவு 3727-2
பண்ணினேன் ஆய்ப் பசித்து அருளத் தாழ்த்தது எனினும் பணி சமைத்தேன் 3727-3
எண்ணம் வாய்ப்ப எழுந்து அருள வேண்டும் என்று அங்கு எடுத்துரைப்பார் 3727-4

69. இறையும் தாழாது எழுந்து அருளி அமுது செய்யும் என்று இறைஞ்ச 3728-1
கறையும் கண்டத்தினில் மறைத்துக் கண்ணும் நுதலில் காட்டாதார் 3728-2
நிறையும் பெருமைச் சிறுத்தொண்டீர் போதும் என்ன நிதி இரண்டும் 3728-3
குறைவன் ஒருவன் பெற்று உவந்தால் போலக் கொண்டு மனை புகுந்தார் 3728-4

70. வந்து புகுந்து திருமனையில் மனைவியா தாம் மாதவரை 3729-1
முந்த எதிர் சென்று அடி வணங்கி முழுதும் அழகு செய்த மனைச் 3729-2
சந்த மலர் மாலைகள் முத்தின் தாமம் நாற்றித் தவிசு அடுத்த 3729-3
கந்த மலர் ஆசனம் காட்டிக் கமழ் நீர்க் கரகம் எடுத்து ஏத்த 3729-4

71. தூய நீரால் சிறுத்தொண்டர் சோதியார் தம் கழல் விளக்கி 3730-1
ஆய புனிதப் புனல் தங்கள் தலைமேல் ஆரத் தெளித்து இன்பம் 3730-2
மேய இல்லம் எம்மருங்கும் வீசி விரை மென்மலர்ச் சாந்தம் 3730-3
ஏயும் தூப தீபங்கள் முதல் பூசனை செய்து இறைஞ்சுவார் 3730-4

72. பனி வெண் திங்கள் சடை விரித்த பயில் பூம் குஞ்சி பயிரவர் ஆம் 3731-1
புனிதர் தம்மைப் போனகமும் கறியும் படைக்கும்படி பொற்பின் 3731-2
வனிதை யாரும் கணவரும் முன் வணங்கிக் கேட்ப மற்று அவர்தாம் 3731-3
இனிய அன்னம் உடன் கறிகள் எல்லாம் ஒக்கப் படைக்க என 3731-4

73. பரிசு விளங்கப் பரிகலமும் திருத்தி பாவாடையில் ஏற்றித் 3732-1
தெரியும் வண்ணம் செம் சாலிச் செழும் பேன கமும் கறி அமுதும் 3732-2
வரிசையினில் முன் படைத்து எடுத்து மன்னும் பரிகலக் கான் மேல் 3732-3
விரி வெண் துகிலின் மிசை வைக்க விமலர் பார்த்து அங்கு அருள் செய்வார் 3732-4

74. சொன்ன முறையில் படுத்த பசுத் தொடர்ந்த உறுப்பு எலாம் கொண்டு 3733-1
மன்னு சுவையில் கறி ஆக்கிமாண அமைத்தீர் ஏ என்ன 3733-2
அன்னம் அனையார் தலை இறைச்சி அமுதுக்கு ஆகா எனக் கழித்தோம் என்ன 3733-3
அதுவும் கூட நாம் உண்பது என்றார் இடர் தீர்ப்பார் 3733-4

75. சிந்தை கலங்கிச் சிறுத் தொண்டர் மனைவியார் ஓடும் திகைத்து அயரச் 3734-1
சந்தானத்தார் எனும் தாதியார்தாம் அந்தத் தலை இறைச்சி 3734-2
வந்த தொண்டர் அமுது செயும் பொழுது நினைக்க வரும் என்றே 3734-3
முந்த அமைத்தேன் கறி அமுது என்று எடுத்துக் கொடுக்க முகம் மலர்ந்தார் 3734-4

76. வாங்கி மகிழ்ந்து படைத்து அதன் பின் வணங்கும் சிறுத் தொண்டரை நோக்கி 3735-1
ஈங்கு நமக்குத் தனி உண்ண ஒண்ணாது ஈசன் அடியார் இப் 3735-2
பாங்கு நின்றார் தமைக் கொண்டு வீர் என்று பரமர் பணித்து அருள 3735-3
ஏங்கிக் கெட்டேன் அமுது செய்ய இடையூறு இதுவோ என நினைவார் 3735-4

77. அகத்தின் புறத்துப் போய் அருளால் எங்கும் காணார் அழிந்து அணைந்து 3736-1
முகத்தில் வாட்டம் மிகப் பெருகப் பணிந்து முதல்வர்க்கு உரை செய்வார் 3736-2
இகத்தும் பரத்தும் இனி யாரைக் காணேன் யானும் திருநீறு 3736-3
சகத்தில் இடுவார் தமைக் கண்டே இடுவேன் என்று தாழ்ந்து இறைஞ்ச 3736-4

78. உம்மைப் போல் நீறு இட்டார் உளரோ உண்பீர் நீர் என்று 3737-1
செம்மை கற்பில் திருவெண்காட்டு அம்மை தம்மைக் கலம் திருத்தி 3737-2
வெம்மை இறைச்சி சோறு இதனில் மீட்டுப் படையும் எனப் படைத்தார் 3737-3
தம்மை ஊட்ட வேண்டி அவர் உண்ணப் புகலும் தடுத்து அருளி 3737-4

79. ஆறு திங்கள் ஒழிந்து உண்போம் உண்ணும் அளவும் தரியாது 3738-1
சோறு நாளும் உண்பீர் முன் உண்பது என் நம் உடன் துய்ப்ப 3738-2
மாறுஇல் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும் என 3738-3
ஈறும் முதலும் இல்லாதாருக்கு இப்போது உதவான் அவன் என்றார் 3738-4

80. நாம் இங்கு உண்பது அவன் வாந்தால் நாடி அழையும் என நம்பர் 3739-1
தாம் அங்கு அருளிச் செய்யத் தரியார் தலைவர் அமுது செய்து அருள 3739-2
யாம் இங்கு என் செய்தால் ஆகும் என்பார் விரைவு உற்று எழுந்து அருளால் 3739-3
பூ மென் குழலார் தம் மோடும் புறம் போய் அழைக்கப் புகும் போது 3739-4

81. வையம் நிகழும் சிறுத் தொண்டர் மைந்தா வருவாய் என அழைத்தார் 3740-1
தையலாரும் தலைவர் பணி தலை நிற்பார் ஆய்த் தாம் அழைப்பார் 3740-2
செய்ய மணியே சீராளா வாராய் சிவனார் அடியார் யாம் 3740-3
உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்றார் என்று ஓலம் இட 3740-4

82. பரமர் அருளால் பள்ளியின் நின்று ஓடிவருவான் போல் வந்த 3741-1
தரம் இல் வனப்பின் தனிப் புதல்வன் தன்னை எடுத்து தழுவித் தம் 3741-2
கரம் முன் அணைத்துக் கணவனார் கையில் கெடுப்பக் களி கூர்ந்தார் 3741-3
புரம் மூன்று எரித்தார் திருத்தொண்டர் உண்ணப் பெற்றோம் எனும் பொலிவால் 3741-4

83. வந்த மகனைக் கடிதில் கொண்டு அமுது செய்விப்பான் வந்தார் 3742-1
முந்தவே அப் பயிரவராம் முதல்வர் அம் கண் மறைந்து அருளச் 3742-2
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார் வீழ்ந்தார் தெருமந்தார் 3742-3
வெந்த இறைச்சிக் கறி அமுதும் கலத்தில் காணார் வெரு உற்றார் 3742-4

84. செய்ய மேனிக் கரும் குஞ்சிச் செழும் அஞ்சுகத்துப் பயிரவர் யாம் 3743-1
உய்ய அமுது செய்யாதே ஒளித்தது எங்கே எனத் தேடி 3743-2
மையல் கொண்டு புறத்து அணைய மறைந்த அவர் தாம் மலை பயந்த 3743-3
தைய லோடும் சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவார் 3743-4

85. தனி வெள் விடை மேல் நெடும் விசும்பில் தலைவர் பூத கண நாதர் 3744-1
முனிவர் அமரர் விஞ்சையர்கள் முதல் ஆய் உள்ளோர் போற்றி இசைப்ப 3744-2
இனிய கறியும் திரு அமுதும் அமைத்தார் காண எழுந்து அருளிப் 3744-3
பனி வெண் திங்கள் முடி துளங்க பரந்த கருணை நோக்கு அளித்தார் 3744-4

86. அன்பின் வென்ற தொண்டர் அவர்க்கு அமைந்த மனையா மைந்தர் 3745-1
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதும் கண்டு பரவசம் ஆய் 3745-2
என்பும் மனமும் கரைந்து உருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார் 3745-3
பின்பு பரமர் தகுதியினால் பெரியோர் அவருக்கு அருள் புரிவார் 3745-4

87. கொன்றை வேணியார் தாமும் பாகம் கொண்ட குலக் கொடியும் 3746-1
வென்றி நெடுவேல் மைந்தரும் தம் விரைப்பூம் கமலச் சேவடிக் கீழ் 3746-2
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார் 3746-3
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க உடன் கொண்டு ஏகினார் 3746-4

88. ஆறு முடிமேல் அணிந்தவருக்கு அடியார் என்று கறி அமுதா 3747-1
ஊறு இலாத தனிப் புதல்வன் தன்னை அரிந்து அங்கு அமுது ஊட்டப் 3747-2
பேறு பெற்றார் சே அடிகள் தலைமேல் கொண்டு பிற உயிர்கள் 3747-3
வேறு கழற்று அறிவார் தம் பெருமையும் தொழுது விளம்புவார் 3747-4

## 37 கழறிற் அறிவார் நாயனார் புராணம்

1. மாவீற்று இருந்த பெரும் சிறப்பின் மன்னும் தொன்மை மலை நாட்டுப் 3748-1
பா வீற்றிருந்த பல்புகழ் ஆர் பயிலும் இயல்பில் பழம் பதி தான் 3748-2
சே வீற்று இருந்தார் திருவஞ்சைக் களமும் நிலவிச் சேரர் குலக் 3748-3
கோ வீற்று இருந்து முறை புரியும் குலக்கோ மூதூர் கொடும் கோளூர் 3748-4

2. காலை எழும் பல் கலையின் ஒலி களிற்றுக் கன்று வடிக்கும் ஒலி 3749-1
சோலை எழும் மென் சுரும்பின் ஒலி துரகச் செருக்கால் சுலவும் ஒலி 3749-2
பாலை விபஞ்சி பயிலும் ஒலி பாடல் ஆடல் முழவின் ஒலி 3749-3
வேலை ஒலியை விழுங்கி எழ விளங்கி ஓங்கும் வியப்பினது ஆல் 3749-4

3. மிக்க செல்வம் மனைகள் தொறும் விளையும் இன்பம் விளங்குவன 3750-1
பக்கம் நெருங்கும் சாலை தொறும் பயில் சட்ட அறங்கள் பல்குவன 3750-2
தக்க அணி கொள் மாடங்கள் தொறும் சைவ மேன்மை சாற்றுவன 3750-3
தொக்க வளங்கள் இடங்கள் தொறும் அடங்க நிதியம் துவன்றுவன 3750-4

4. வேத நெறியின் முறை பிறழா மிக்க ஒழுக்கம் தலை நின்ற 3751-1
சாதி நான்கு நிலை தழைக்கும் தன்மைத்து ஆகி தடம் மதில் சூழ் 3751-2
சூத வகுள சரள நிரை துதையும் சோலை வள நகர் தான் 3751-3
கோதை அரசர் மகோதை எனக் குலவும் பெயரும் உடைத்து 3751-4

5. முருகு விரியும் மலர்ச் சோலை மூதூர் அதன் கண் முறை மரபின் 3752-1
அருதி அழியும் கலி நீக்கி அறம் கொள் சைவத் திறம் தழைப்பத் 3752-2
திருகு சின வெம் களியானைச் சேரர் குலமும் உலகும் செய் 3752-3
பெருகும் தவத்தால் அரன் அருளால் பிறந்தார் பெருமாக் கோதையார் 3752-4

6. திருமா நகரம் திரு அவதாரம் செய் விழவின் சிறப்பினால் 3753-1
வருமா களிகூர் நெய் ஆடல் எடுப்ப வான மலர் மாரி 3753-2
தருமா விசும்பின் மிக நெருங்க தழங்கும் ஒலி மங்கலம் தழைப்பப் 3753-3
பெருமா நிலத்தில் எவ்வுயிரும் பெருகு மகிழ்ச்சி பிறங்கின ஆல் 3753-4

7. மண் மேல் சைவ நெறி வாழ வளர்ந்து முன்னை வழி அன்பால் 3754-1
கண் மேல் விளங்கு நெறியினார் கழலே பேணும் கருத்தினர் ஆய் 3754-2
உள் மேவிய அன்பினர் ஆகி உரிமை அரசர் தொழில் புரியார் 3754-3
தெள் நீர் முடியார் திரு வஞ்சைக் களத்தில் திருத்தொண்டே புரிவார் 3754-4

8. உலகின் இயல்பும் அரசு இயல்பும் உறுதி அல்ல என உணர்வார் 3755-1
புலரி எழுந்து புனல் மூழ்கிப் புனித வெண் நீற்றினும் மூழ்கி 3755-2
நிலவு திரு நந்தன வனத்து நீடும் பணிகள் பல செய்து 3755-3
மலரும் முகையும் கொணர்ந்து மாலை சாத்த மகிழ்ந்து அமைத்து 3755-4

9. திரு மஞ்சனமும் கொணர்ந்து திரு அலகும் இட்டு திரு மெழுக்கு 3756-1
வரும் அன்புடன் இன்பு உறச் சாத்தி மற்றும் உள்ள திருப்பணிகள் 3756-2
பெருமை பிறங்கச் செய்து அமைத்துப் பேணும் விருப்பில் திருப்பாட்டும் 3756-3
ஒருமை நெறியின் உணர்வு வர ஓதிப் பணிந்தே ஒழுகும் நாள் 3756-4

10. நீரின் மலிந்த கடல் அகழி நெடுமால் வரையின் கொடிமதில் சூழ் 3757-1
சீரின் மலிந்த திரு நகரம் அதனில் செம்கோல் பொறையன் எனும் 3757-2
காரின் மலிந்த கெடை நிழல் மேல் கவிக்கும் கொற்றக் குடை நிழல் கீழ்த் 3757-3
தாரின் மலிந்த புயத்து அரசன் தரணி நீத்துத் தவம் சார்ந்தான் 3757-4

11. வந்த மரபின் அரசு அளிப்பான் வனம் சார் தவத்தின் மருவிய பின் 3758-1
சிந்தை மதி நூல் தேர் அமைச்சர் சில நாள் ஆய்ந்து தெளிந்த நெறி 3758-2
முந்தை மரபில் முதல்வர் திருத் தொண்டு முயல்வார் முதற்று ஆக 3758-3
இந்து முடியார் திருவஞ்சைக் களத்தில் அவர் பால் எய்தினார் 3758-4

12. எய்தி அவர் தம் எதிரில் இறைஞ்சி இரும் தண் சாரல் மலை நாட்டுச் 3759-1
செய்தி முறைமையால் உரிமைச் செங்கோல் அரசு புரிவதற்கு 3759-2
மைதீர் நெறியின் முடி சூடி அருளும் மரபால் வந்தது எனப் 3759-3
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண் 3759-4

13. இன்பம் பெருகும் திருத் தொண்டுக்கு இடையூறு ஆக இவர் மொழிந்தார் 3760-1
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்க அருள் உண்டேல் 3760-2
என்பும் அரவும் புனைந்தாரை இடை பெற்று அறிவேன் எனப் புக்கு 3760-3
முன்பு தொழுது விண்ணப்பம் செய்தார் முதல்வர் அருளினால் 3760-4

14. மேவும் உரிமை அரசு அளித்தே விரும்பும் காதல் வழிபாடும் 3761-1
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறு இல்லாத் 3761-2
தாவு இல் விறலும் தண்டாத கொடையும் படை வாகனமும் முதல் ஆம் 3761-3
காவல் மன்னர்க்கு உரியனவும் எல்லாம் கைவந்து உறப் பெற்றார் 3761-4

15. ஆன அருள் கொண்டு அஞ்சலி செய்து இறைஞ்சிப் புறம் போந்து அரசு அளித்தல் 3762-1
ஊனம் ஆகும் திருத் தொண்டுக்கு எனினும் உடையான் அருளாலே 3762-2
மேன்மை மகுடம் தாங்குதற்கு வேண்டும் அமைச்சர்க்கு உடன் படலும் 3762-3
மான அமைச்சர் தாள் பணிந்து அவ் வினைமேல் கொண்டு மகிழ்ந்து எழுந்தார் 3762-4

16. உரிமை நாளில் ஒரை நலன் எய்த மிக்க உபகரணம் 3763-1
பெருமை சிறக்க வேண்டுவன எல்லாம் பிறங்க மங்கலம் செய்து 3763-2
இருமை உலகுக்கு ஒருமை முடி கவித்தார் எல்லா உயிரும் மகிழ் 3763-3
தரும நிலைமை அறிந்து புவி தாங்கும் கழறிற் அறிவார் தாம் 3763-4

17. தம்பிரானார் கோயில் வலம் கொண்டு திருமுன் தாழ்ந்து எழுந்து 3764-1

கும்ப யானை மேல் கொண்டு கொற்றக் குடையும் சாமரையும் 3764-2
நம்பும் உரிமை யவர் தாங்க நலம் கொள் நகர் சூழ் வலம் கொள்வார் 3764-3
மொய்ம்பில் உவரின் பொதி சுமந்தோர் வண்ணான் முன்னே வரக் கண்டார் 3764-4

18. மழையில் கரைந்து அங்கு உவர் ஊறி மேனி வெளுத்த வடிவினால் 3765-1
உழையில் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம் என்று உணர்ந்தே 3765-2
இழஈல் சிறந்த ஓடை நுதல் யானைக் கழுத்தின் நின்று இழிந்து 3765-3
விழைவில் பெருகும் காதலினால் விரைந்து சென்று கை தொழுதார் 3765-4

19. சேரர் பெருமான் தொழக் கண்டு சிந்தை கலங்கி முன் வணங்கி 3766-1
யார் என்று அடியேனைக் கொண்டது அடி வண்ணான் எனச் 3766-2
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின் 3766-3
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும் என மொழிந்தார் 3766-4

20. மன்னர் பெருமான் திருத்தொண்டு கண்டு மதி நீடு அமைகர் எலாம் 3767-1
சென்னி மிசை அஞ்சலி செய்து போற்றச் சினமால் களிறு ஏறி 3767-2
மின்னு மணிப் பூண் கொடி மாட வீதி மூதூர் வலம் கொண்டு 3767-3
பொன்னின் மணி மாளிகை வாயில் புக்கார் புனை மங்கலம் பொலிய 3767-4

21. யானை மிசை நின்று இழிந்து அருளி இலங்கும் மணி மண்டபத்தின் கண் 3768-1
மேன்மை அரி ஆசனத்து ஏறி விளங்கும் கொற்றக் குடை நிழற்றப் 3768-2
பானல் விழியார் சாமரை முன் பணி மாறப்பன் மலர் தூவி 3768-3
மான அரசர் போற்றிட வீற்று இருந்தார் மன்னர் பெருமானார் 3768-4

22. உலகு புரக்கும் கொடைவளவர் உரிமைச் செழியர் உடன் கூட 3769-1
நிலவு பெரு முக் கோக்களாய் நீதி மனுநூல் நெறி நடத்தி 3769-2
அலகில் அரசர் திறை கொணர அகத்தும் புறத்தும் பகை அறுத்து 3769-3
மலரும் திரு நீற்று ஒளிவளர மறைகள் வளர மண் அளிப்பார் 3769-4

23. நீடும் உரிமைப் பேர் அரசால் நிகழும் பயனும் நிறை தவமும் 3770-1
தேடும் பொருளும் பெரும் துணையும் தில்லைத் திருச்சிற்றம் பலத்து உள் 3770-2
ஆடும் கழலே எனத் தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம் 3770-3
கூடும் அன்பில் அர்ச்சனை மேல் கொண்டார் சேரர் குலப் பெருமாள் 3770-4

24. வாசத் திருமஞ்சனம் பள்ளித் தாமம் சாந்தம் மணித் தூபம் 3771-1
தேசில் பெருகும் செழும் தீபம் முதலாயினவும் திரு அமுதும் 3771-2
ஈசர்க்கு ஏற்ற பரிசினால் அர்ச்சித்து அருள எந்நாளும் 3771-3
பூசைக்கு அமர்ந்த பெரும் கூத்தர் பொன் பார் சிலம்பின் ஒலி அளித்தார் 3771-4

25. நம்பர் தாளின் வழிபாட்டால் நாளும் இன்பு உற்று அமர்கின்றார் 3772-1
இம்பர் உலகில் இரவலர்க்கும் வறியோர் எவர்க்கும் ஈகையினால் 3772-2
செம் பொன் மழை ஆம் எனப் பொழிந்து திருந்து வெற்றி உடன் பொருந்தி 3772-3
உம்பர் போற்றத் தம் பெருமாற்கு உரிய வேள்வி பல செய்தார் 3772-4

26. இன்ன வண்ணம் இவர் ஒழுக எழில் கொள் பாண்டி நல் நாட்டு 3773-1
மன்னும் மதுரைத் திரு வால வாயில் இறைவர் வரும் அன்பால் 3773-2
பன்னும் இசைப் பாடலில் பரவும் பாணனார் பத்திரனார்க்கு 3773-3
நன்மை நீடு பெரும் செல்வம் நல்க வேண்டி அருள் புரிவார் 3773-4

27. இரவு கனவில் எழுந்து அருளி என்பால் அன்பால் எப்பொழுதும் 3774-1
பரவும் சேரன் தனக்கு உனக்குப் பைம் பொன் பட்டு ஆடை 3774-2
விரவு கதிர் செய் நவ மணிப் பூண் வேண்டிற்று எல்லாம் குறைவு இன்றித் 3774-3
தர நம் ஓலைத் தருகின்றோம் தாழாது ஏகி வருக என்று 3774-4

28. அதிர் கழல் உதியர் வேந்தற்கு அருள் செய்த பெருமை யாலே 3775-1
எதிர் இல் செல்வத்துக்கு ஏற்ற இருநிதி கொடுக்க என்று 3775-2
மதிமலி புரிசை என்னும் வாசகம் வரைந்த வாய்மைக் 3775-3
கதிர் ஒளி விரிந்த தோட்டு திருமுகம் கொடுத்தார் காண 3775-4

29. சங்கப் புலவர் திருமுகத்தைத் தலைமேல் கொண்டு பத்திரனார் 3776-1
அங்கு அப்பொழுதே புறப்பட்டு மலை நாடு அணைய வந்து எய்தித் 3776-2
துங்கப் பரிசை கொடுங் கோளூர் தன்னில் புகுந்து துன்னும் கொடி 3776-3
மங்குல் தொடக்கும் மாளிகை முன் வந்து மன்னர்க்கு அறிவித்தார் 3776-4

30. கேட்ட பொழுதே கை தலைமேல் கொண்டு கிளர்ந்த பேரன்பால் 3777-1
நாட்டம் பொழி நீர் வழிந்து இழிய எழுந்து நடுக்கம் மிக எய்தி 3777-2
ஓட்டத் தம் பொன் மாளிகையின் புறத்தில் உருகும் சிந்தை உடன் 3777-3
பாட்டின் தலைமைப் பணனார் பாதம் பலகால் பணிகின்றார் 3777-4

31. அடியேன் பொருள் ஆத் திருமுகம் கொண்டு அணைந்தது என்ன அவர் தாமும் 3778-1
கொடிசேர் விடையார் திருமுகம் கைக்கொடுத்து வணங்கக் கொற்றவனார் 3778-2
முடிமேல் கொண்டு கூத்து ஆடி மொழியும் குழறிப் பொழி கண்ணீர் 3778-3
பொடியார் மார்பில் பரந்து விழப் புவிமேல் பலகால் வீழ்ந்து எழுந்தார் 3778-4

32. பரிவில் போற்றித் திருமுகத்தைப் பலகால் தொழுது படி எடுக்க 3779-1
உரிய வகையில் எடுத்து ஓதி உம்பர் பெருமான் அருள் போற்றி 3779-2
விரிபொன் சுடர் மாளிகை புக்கு மேவும் உரிமைச் சுற்றம் எலாம் 3779-3
பெரிது விரைவில் கொடு போந்து பேணு அமைச்சர்க்கு அருள் செய்வார் 3779-4

33. தங்கள் குல மாளிகை இதனுள் நலத்தின் மிக்க நிதிக் குவையாய்ப் 3780-1
பொங்கி நிறைந்த பலவேறு வகையில் பொலிந்த பண்டாரம் 3780-2
அம்கண் ஒன்றும் ஒழியாமை அடையக் கண்டு புறப்பட்டுத் 3780-3
தங்கும் பொதிசெய் தாளின்மேல் சமைய ஏற்றிக் கொணரும் என 3780-4

34. சேரர் பெருமான் அருள் செய்யத் திருந்து மதிநூல் மந்திரிகள் 3781-1
சாரும் மணி மாளிகை உள் ஆற்ற தனங்கள் எல்லாம் நிறைந்த பெரும் 3781-2
சீர் கொள் நிதி அம் எண் இறந்த எல்லாம் பொதி செய்து ஆளின் மேல் 3781-3
பாரில் நெருங்க மிசை ஏற்றிக் கொண்டு வந்து பணிந்தார்கள் 3781-4

35. பரந்த நிதியின் பரப்பு எல்லாம் பணனார் பத்திரனார்க்கு 3782-1
நிரந்த தனங்கள் வேறு வேறு நிரைத்துக் கட்டி மற்று இவையும் 3782-2
உரம் தங்கிய வெம் கரிபரிகள் முதலாம் உயிர் உள்ளன தனமும் 3782-3
புரந்த அரசும் கொள்ளும் என மொழிந்தார் பொறையர் புரவலனார் 3782-4

36. பாணனார் பத்திரனாரும் பைம்பொன் மௌலிச் சேரலனார் 3783-1
காணக் கொடுத்த நிதி எல்லாம் கண்டு மகிழ்வு உற்று அதிசயித்துப் 3783-2
பேண எனக்கு வேண்டுவன அடியேன் கொள்ள பிஞ் ஞகனார் ஆணை 3783-3
அரசும் அரசு உறுப்பும் கைக் கொண்டு அருளும் என இறைஞ்ச 3783-4

37. இறைவர் ஆணை மறுப்ப அதனுக்கு அஞ்சி இசைந்தார் இகல் வேந்தர் 3784-1
நிறையும் நிதியின் பரப்பு எல்லாம் நிலத்தை நெளிய உடன் கொண்டே 3784-2
உறை மும்மதத்துக் களிறு பரி உள் இட்டன வேண்டுவ கொண்டோர் 3784-3
பிறை வெண் கோட்டுக் களிற்றுமேல் கொண்டு போந்தார் பெரும்பாணர் 3784-4

38. பண்பு பெருகும் பெருமாளும் பாணனார் பத்திரனார் பின் 3785-1
கண்கள் பொழிந்த காதல் நீர் வழியக் கையால் தொழுது அணைய 3785-2
நண்பு சிறக்கும் அவர் தம்மை நகரின் புறத்து விடை கொண்டு 3785-3
திண் பொன் புரிசைத் திரு மதுரை புக்கார் திருந்தும் இசைப் பாணர் 3785-4

39. வான வரம்பர் குலம் பெருக்கும் மன்னனார் உம் மறித்து ஏகிக் 3786-1
கூனல் இளம் வெண் பிறைக் கண்ணி முடியார் அடிமை கொண்டு அருளும் 3786-2
பான்மை அருளின் பெருமையினை நினைந்து பலகால் பணிந்து ஏத்தி 3786-3
மேன்மை விளங்கு மாளிகை மண்டபத்து உள் அரசு வீற்று இருந்தார் 3786-4

40. அளவு இல் பெருமை அகில யோனிகளும் கழறிற்று அறிந்து அவற்றின் 3787-1

உளம் மன்னிய மெய் உறு துயரம் ஒன்றும் ஒழியா வகை அகற்றிக் 3787-2
களவு கொலைகள் முதலான கடிந்து கழற்றிற்று அறிவார் தாம் 3787-3
வளவர் பெருமானுடன் செழியர் மகிழும் கலப்பில் மகிழும் நாள் 3787-4

41. வானக் கங்கை நதி பொதிந்த மல்கு கடையார் வழிபட்டுத் 3788-1
தூ நல் சிறப்பின் அர்ச்சனை ஆம் கொண்டு புரிவார் தமக்கு ஒரு நாள் 3788-2
தேன் அக்கு அலர்ந்த கொன்றையின் ஆர் ஆடல் சிலம்பின் ஒலி முன் போல் 3788-3
மானப் பூசை முடிவின் கண் கேளாது ஒழிய மதிமயங்கி 3788-4

42. பூசை கடிது முடித்து அடியேன் என்னோ பிழைத்தது எனப் பொரும் 3789-1
ஆசை உடம்பால் மற்று இனி வேறு அடையும் இன்பம் யாது என்று 3789-2
தேகின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார்பினில் நாட்ட 3789-3
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார் 3789-4

43. ஆடல் சிலம்பின் ஒலி கேளா உடைவாள் அகற்றி அம்கைமலர் 3790-1
கூடத் தலைமேல் குவித்து அருளிக் கொண்டு வீழ்ந்து தொழுது எழுந்து 3790-2
நீடப் பரவி மொழிகின்றார் நெடுமால் பிரமன் அருமறை முன் 3790-3
தேடற்கு அரியாய் திருஅருள் திரு அருள் முன் செய்யது ஒழிந்தது என் என்றார் 3790-4

44. என்ற பொழுதில் இறைவர் தாம் எதிர் நின்று அருளாது எழும் ஒலியால் 3791-1
மன்றின் இடை நம் கூத்து ஆடல் வந்து வணங்கி வன் தொண்டன் 3791-2
ஒன்றும் உணர்வால் நமைப் போற்றி உரை சேர் பதிகம் பாடுதல் ஆல் 3791-3
நின்று கேட்டு வரத் தாழ்த்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார் 3791-4

45. என்னே அடியார்க்கு இவர் அருளும் கருணை இருந்தவாறு என்று 3792-1
பொன் நேர் சடையார் திருநடம் செய் புலியூர் பொன் அம்பலம் இறைஞ்சி 3792-2
தன் நேர் இல்லா வன் தொண்டர் தமையும் காண்பான் என விரும்பி 3792-3
நல் நீர் நாட்டுக் செல நயந்தார் நாமச் சேரர் கோமான் ஆர் 3792-4

46. பொன் ஆர் மௌலிச் சேரலன் ஆர் போற்றும் அமைச்சர்க்கு அஃது இயம்பி 3793-1
நல் நாள் கொண்டு பெரும் பயணம் எழுக என்று நலம் சாற்ற 3793-2
மினார் அயில் வேல் குல மறவர் வென்றி நிலவும் சிலை வீரர் 3793-3
அந் நாட்டு உள்ளார் அடைய நிரந்து அணைந்தார் வஞ்சி அகல் நகர்வாய் 3793-4

47. இட்ட நல்நாள் ஓரையினில் இறைவர் திருவஞ்சைக் களத்து 3794-1
மட்டுவிரிபூம் கொன்றையினார் தம்மை வலம் கொண்டு இறைஞ்சிப் போய் 3794-2
பட்டநுதல் வெம் களியாணை பிடர்மேல் கொண்டு பனி மதியம் 3794-3
தொட்ட கொடிமாளிகை மூது ஊர் கடந்தார் உதியர் தோன்றலார் 3794-4

48. யானை அணிகள் பரந்து வழி எங்கும் நிரந்து செல்லுவன 3795-1
மான மலை நாட்டினில் மலிந்த மலைகள் உடன் போதுவ போன்ற 3795-2
சேனைவீரர் புடைபரந்து செல்வது அம் கண் மலை சூழ்ந்த 3795-3
கானம் அடைய உடன் படர்வன போலும் காட்சி மேவினது ஆல் 3795-4

49. புரவித் திரள்கள் ஆ யோகப் பொலிவின் அசைவு இல் போதுவன 3796-1
அரவச் சேனைக் கடல் தரங்கம் மடுத்து மேல் மேல் அடர்வன போல் 3796-2
விரவிப் பரந்து சென்றன ஆல் மிசையும் அவலும் ஒன்று ஆக 3796-3
நிரவிப் பரந்த நெடும் சேனை நேமி நெளியச் சென்றன ஆல் 3796-4

50. அந் நாட்டு எல்லை கடந்து அணைய அமைச்சர்க்கு எல்லாம் விடை அருளி 3797-1
மினார் மணிப்பூண் மன்னவன் ஆர் வேண்டுவாரை உடன்கொண்டு 3797-2
கொனார் அயில் வேல் மறவர் பயில் கொங்கர் நாடு கடந்து அருளி 3797-3
பொன் நாட்டவரும் அணைந்து ஆடும் பொன்னி நீர் நாட்டு இடைப் போவார் 3797-4

51. சென்ற திசையில் சிவன் அடியார் சிறப்பினோடும் எதிர்கொள்ளக் 3798-1

குன்றும் கானும் உடைக் குறும்பர் இடங்கள் தோறும் குறை அறுப்பத் 3798-2
துன்று முரம்பும் கான் ஆறும் உறும் கல் சுரமும் பல கடந்து 3798-3
வென்றி விடையார் இடம் பலவும் மேவிப் பணிந்து செல்கின்றார் 3798-4

52. பொருவு இல் பொன்னித் திருநதியின் கரை வந்து எய்திப் புனித நீர் 3799-1
தீர்த்தம் மகிழ்ந்து ஆடி மருங்கு வடபால் கரை ஏறித் 3799-2
திருவில் பொலியும் திருப்புலியூர் செம்பொன் மன்றுள் நடம் போற்ற 3799-3
உருகும் மனத்தின் உடன் சென்றார் ஒழியா அன்பின் வழி வந்தார் 3799-4

53. வந்து தில்லை மூது ஊரின் எல்லை வணங்கி மகிழ்ச்சியினால் 3800-1
அம் தண் ஆளர் தொண்டர் குழாம் அணைந்த போதில் எதிர் வணங்கிச் 3800-2
சந்த விரைப் பூம் திருவீதி இறைஞ்சித் தலைமேல் கரம் முகிழ்ப்பச் 3800-3
சிந்தை மகிழ எழு நிலை கோபுரத்தை அணைந்தார் சேரலன் ஆர் 3800-4

54. நிலவும் பெருமை எழுநிலைக் கோபுரத்தின் முன்னர் நிலத்து இறைஞ்சி 3801-1
மலரும் கண்ணீர்த் துளி ததும்பப் புகுந்து மாளிகை வலம் கொண்டு 3801-2
உலகு விளக்கும் திருப் பேர் அம்பலத்தை வணங்கி உள் அணைந்தார் 3801-3
அலகு இல் அண்டம் அளித்தவர் நின்று ஆடும் திருச்சிற்றம்பலம் முன் 3801-4

55. அளவு இல் இன்பப் பெரும் கூத்தர் ஆட எடுத்த கழல் காட்ட 3802-1
உளமும் புலனும் ஒருவழிச் சென்று உருகப் போற்றி உய்கின்றார் 3802-2
களனில் விடம் வைத்து அளித்த அமுது அன்றி மன்றில் கழல் வைத்து 3802-3
வளரும் திருக்கூத்து அமுது உலகுக்கு அளித்த கருணை வழுத்தினார் 3802-4

56. ஆரா ஆசை ஆனந்தக் கடல் உள் திளைத்தே அமர்ந்து அருளால் 3803-1
சீர் ஆர் வண்ணப் பொன் வண்ணத்து திரு அந்தாதி திருப்படிக்கீழ்ப் 3803-2
பாரா தரிக்க எடுத்து ஏத்திப் பணிந்தார் பருவ மழை பொழியும் 3803-3
காரால் நிகர்க்க அரிய கொடைக் கையார் கழற்றிவார் தாம் 3803-4

57. தம்பிரானார்க்கு எதிர் நின்று தமிழ் சொல் மாலை கேட்பிக்க 3804-1
உம்பர் வாழ நடம் ஆடும் ஒருவர் அதற்குப் பரிசில் எனச் 3804-2
செம்பொன் மணி மன்றில் எடுத்த செய்ய பாதத்து திருச்சிலம்பின் 3804-3
இம்பர் நீட எழுந்த ஒலிதாமும் எதிரே கேட்பித்தார் 3804-4

58. ஆடல் சிலம்பின் ஒலி கேட்பார் அளவு இல் இன்ப ஆனந்தம் 3805-1
கூடப் பெற்ற பெரும் பேற்றின் கொள்கை வாய்ப்பக் கும்பிடுவார் 3805-2
நீடப் பணியும் காலம் எலாம் நின்று தொழுது புறம் போந்து 3805-3
மாடத் திரு மாளிகை வீதி வணங்கிப் புறத்து வைகினார் 3805-4

59. பரவும் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம் பொன் அம்பலத்து உள் 3806-1
அரவும் புனலும் சடை ஆட ஆடுவார் கூத்து ஆராமை 3806-2
விரவும் காதல் மிக்கு ஓங்க வேதம் படியும் திருப்படிக்கீழ் 3806-3
இரவும் பகலும் பணிந்து ஏத்தி இன்பம் சிறக்கும் அந் நாளில் 3806-4

60. ஆடும் பெருமான் பாடல் கேட்டு அருளித் தாழ்ந்த படி தமக்குக் 3807-1
கூடும் பரிசால் முன்பு அருளிச் செய்த நாவலூர்க் கோவை 3807-2
நீடும் பெரும் காதலில் காண நிறைந்த நினைவு நிரம்பாமல் 3807-3
தேடும் பாதர் அருளினால் திருவாரூர் மேல் செல எழுந்தார் 3807-4

61. அறிவின் எல்லை ஆய திருத்தில்லை எல்லை அமர்ந்து இறைஞ்சிப் 3808-1
பிறவி இலாத திருவடியைப் பெருகும் உள்ளத்தினில் பெற்று 3808-2
செறியும் ஞானப் போனகர் வந்து அருளும் புகலி சென்று இறைஞ்சி 3808-3
மறி சேர் கரத்தார் கோயில் பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார் 3808-4

62. வழியில் குழியில் செழுவயலின் மதகின் மலர் வாவிகளின் மடுச் 3809-1
சுழியில் தரளம் திரை சொரியும் துறை நீர்ப் பொன்னி கடந்து ஏறி 3809-2
வழியில் திகழும் திருநுதலார் விரும்பும் இடங்கள் இறைஞ்சி உகக் 3809-3
கழிவு இல் பெரும் வெள்ளமும் கொள்ளக் கழனி ஆரூர் கண் உற்றார் 3809-4

63. நம்பி தாமும் அந் நாள் போய் நாகைக் காரோணம் பாடி 3810-1
அம் பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம் அடல் பரிமா 3810-2
பைம் பொன் சுரிகை முதலான பெற்று மற்றும் பல பதியில் 3810-3
தம்பிரானைப் பணிந்து ஏத்தித் திருவாரூரில் சார்ந்து இருந்தார் 3810-4

64. வந்து சேரர் பெருமானார் மன்னும் திருவரூர் எய்த 3811-1
அம் தண் ஆளர் பெருமானும் அரசர் பெருமான் வரப்பெற்றுச் 3811-2
சிந்தை மகிழ எதிர் கொண்டு சென்று கிடந்தார் சேரலனார் 3811-3
சந்தம் விரைத்தார் வன்தொண்டர் முன்பு விருப்பின் உடன் தாழ்ந்தார் 3811-4

65. முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்து எடுத்தே 3812-1
அன்பு பெருகத் தழுவ விரைந்து ஆர்வத்து ஒடு தழுவ 3812-2
இன்ப வெள்ளத்து இடை நீந்தி ஏற மாட்டாதவர் போல் 3812-3
என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம் என இசைந்தார் 3812-4

66. ஆன நிலைமை கண்ட திருத்தொண்டர் அளவு இல் மகிழ்வு எய்த 3813-1
மானச் சேரர் பெருமானார் தாமும் வன்தொண்டரும் கலந்த 3813-2
பான்மை நண்பால் சேரமான் தோழர் என்று பார் பரவும் 3813-3
மேன்மை நாமம் முனைப்பாடி வேந்தர்க்கு ஆகி விளங்கியது ஆல் 3813-4

67. ஒருவர் ஒருவரில் கலந்த உணர்வால் இன்ப மொழி உரைத்து 3814-1
மருவ இனியார் பால் செய்வது என்னாம் என்னும் மகிழ்ச்சியினால் 3814-2
பருவ மழைச் செம்கை பற்றிக் கொண்டு பரமர் தாள் பணியத் 3814-3
தெருவு நீங்கிக் கோயிலின் உள் புகுந்தார் சேரமான் தோழர் 3814-4

68. சென்று தேவ ஆசிரியனை முன் இறைஞ்சித் திருமாளிகை வலம் கொண்டு 3815-1
ஒன்றும் உள்ளத்தொடும் புகுவார் உடைய நம்பி முன் ஆக 3815-2
நின்று தொழுது கண் அருவி வீழ நிலத்தின் மிசை வீழ்ந்தே 3815-3
என்றும் இனிய தம் பெருமான் பாதம் இறைஞ்சி ஏத்தினார் 3815-4

69. தேவர் முனிவர் வந்து இறைஞ்சும் தெய்வப் பெருமாள் கழல் வணங்கி 3816-1
மூவர் தமக்கு முதல் ஆகும் அவரைத் திருமும் மணிக் கோவை 3816-2
நாவலூரர் தம் முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார் 3816-3
தாவில் பெருமைச் சேரல் அனார் தம்பிரானார் தாம் கொண்டார் 3816-4

70. அம் கண் அருள் பெற்று எழுவாரைக் கொண்டு புறம் போந்து ஆரூரர் 3817-1
நங்கை பரவையார் திருமாளிகையில் நண்ண நல்நுதலார் 3817-2
பொங்கும் விளக்கும் நிறை குடமும் பூ மாலைகளும் புகை அகிலும் 3817-3
எங்கும் மடவார் எடுத்து ஏத்த அணைந்து தாமும் எதிர் கொண்டார் 3817-4

71. சோதி மணி மாளிகையின் கண் சுடரும் பசும் பொன் கால் அமளி 3818-1
மீது பெருமாள் தமை இருத்தி நம்பி மேவி உடன் இருப்பக் 3818-2
கோது இல் குணத்துப் பரவையார் கொழுநர்க்கும் தோழர்க்கும் 3818-3
நீதி வழுவா ஒழுக்கத்து நிறை பூசனைகள் முறை அளித்தார் 3818-4

72. தாண்டும் புரவிச் சேரர் குலப் பெருமாள் தமக்குத் திரு அமுது 3819-1
தூண்டும் சோதி விளக்கு அனையார் அமைக்கத் துணைவர் சொல்லுதலும் 3819-2
வேண்டும் பரிசு வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும் 3819-3
ஈண்டச் சமைப்பித்து உடன் வந்தார்க்கு எல்லாம் இயல்பின் விருந்து அமைத்தார் 3819-4

73. அரசர்க்கு அமைத்த சிறப்பினும் மேல் அடியார்க்கு ஏற்கும் படியாக 3820-1
விரவிப் பெருகும் அன்பின் உடன் விரும்பும் அமுது சமைத்து அதன்பின் 3820-2
புரசைக் களிற்றுச் சேரலன் ஆர் புடை சூழ்ந்து அவரோடு அமுது செயப் 3820-3
பரவைப் பிறந்த திரு அனைய பரவையார் வந்து அறிவித்தார் 3820-4

74.  சேரர் பெருமான் எழுந்து அருளி அமுத செய்யச் செய்தவத்தால் 3821-1
தாரின் மலிபூம் குழல் மடவாய் தாழாது அமுது செய்வி எனப் 3821-2
பாரின் மலிசீர் வன்தொண்டர் அருளிச் செய்யப் பரிகலங்கள் 3821-3
ஏரின் விளங்கத் திருத்திக்கால் இரண்டில் படியாய் ஏற்றுதலும் 3821-4

75.  ஆண்ட நம்பி பெருமாளை உடனே அமுது செய்து அருள 3822-1
வேண்டும் என்ன ஆங்கு அவரும் விரைந்து வணங்கி வெரு உறலும் 3822-2
நீண்ட தடக்கை பிடித்து அருளி மீண்டும் நேரே குறை கொள்ள 3822-3
ஈண்ட அமுது செய்வதனுக்கு இசைந்தார் பொறையார்க்கு இறையவனார் 3822-4

76. ஒக்க அமுது செய்து அருள உயர்ந்த தவத்துப் பரவையார் 3823-1
மிக்க விருப்பால் அமுது செய்வித்து அருளி மேவும் பரிசனங்கள் 3823-2
தக்க வகையால் அறுசுவையும் தாம் வேண்டியவாறு இனிது அருந்தத் 3823-3
ஒக்க மகிழ்ச்சி களி சிறப்பத் தூய விருந்தின் கடன் முடித்தார் 3823-4

77. பனிநீர் விரவு சந்தனத்தின் பசும் கர்ப்பூர விரைக் கலவை 3824-1
வனிதை அவர்கள் சமைத்து எடுப்பக் கொடுத்து மகிழ்மான் மதச் சாந்தும் 3824-2
புனித நறும் பூ மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொன்கொடியார் 3824-3
இனிய பஞ்ச வாசம் உடன் அடைக்காய் அமுதும் ஏந்தினார் 3824-4

78.  ஆய சிறப்பில் பூசனைகள் அளித்த எல்லாம் அமர்ந்து அருளித் 3825-1
தூய நீறு தங்கள் திருமுடியில் வாங்கித் தொழுது அணிந்து 3825-2
மேய விருப்பின் உடன் இருப்பக் கழற்றறிவார் மெய்த்தொண்டின் 3825-3
சேய நீர்மை அடைந்தார் ஆய் நம்பி செம்பொன் கழல் பணிந்தார் 3825-4

79. மலை நாட்டு அரசர் பெருமான் ஆர் வணங்க வணங்கி எதிர் தழுவிக் 3826-1
கலை நாள் பெருகு மதி முகத்துப் பரவையார் தம் கணவனார் 3826-2
சிலை நாட்டிய வெல் கொடியாரைச் சேரத் தந்தார் எனக் கங்கை 3826-3
அலை நாள் கொன்றை முடிச் சடையார் அருளே போற்றி உடன் அமர்ந்தார் 3826-4

80. செல்வத் திருவாரூர் மேவும் செம் புற்றில் இனிது அமர்ந்த 3827-1
வில் வெற்பு உடையார் கழல் வணங்கி வீதி விடங்கப் பெருமானை 3827-2
மல்லல் பவனி சேவித்து வாழ்ந்து நாளும் மனம் மகிழ்ந்து 3827-3
சொல் வித்தகர் தாம் இருவர்களும் தொடர்ந்த காதலுடன் சிறந்தார் 3827-4

81. இவ்வாறு ஒழுகும் நாளின் கண் இலங்கு மணிப்பூண் வன்தொண்டர் 3828-1
மைவாழ் களத்து மறையவனார் மருவும் இடங்கள் பல வணங்கிச் 3828-2
செய்வார் கன்னித் தமிழ் நாட்டுத் திருமா மதுரை முதலான 3828-3
மொய்வார் சடையார் மூது ஊர்கள் இறைஞ்ச முறைமையால் நினைந்தார் 3828-4

82. சேரர் பிரானும் ஆரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பாலும் 3829-1
வாரம் பெருகத் தமக்கு அன்று மதுரை ஆலவாய் அமர்ந்த 3829-2
வீரர் அளித்த திருமுகத்தால் விரும்பும் அன்பின் வணங்குதற்குச் 3829-3
சார எழுந்த குறிப்பாலும் தாமும் உடனே செலத் துணிந்தார் 3829-4

83. இருவர் திரு உள்ளமும் இசைந்த பொழுதில் எழுந்து திருவாரூர் 3830-1
ஒருவர் மலர்த்தாள் புக்கு இறைஞ்சி உடன்பாட்டு அருளால் போந்து அருளி 3830-2
மருவும் உரிமை பெரும் சுற்றம் வரம்பு இல் பணிகள் வாகனங்கள் 3830-3
பொருவு இல் பண்டு ஆரம் கொண்டு போதுவார்கள் உடன் போத 3830-4

84. சேவித்து அணையும் பரிசனங்கள் சூழத் திருவாரூர் இறைஞ்சிக் 3831-1
காவில் பயிலும் புறம்பு அணையைக் கடந்து போந்து கீழ்வேளூர் 3831-2
மேவிப் பரமர் கழல் வணங்கிப் போந்து வேலைக் கழிக் கானல் 3831-3
பூவில் திகழும் பொழில் நாகை புகுந்து காரோணம் பணிந்தார் 3831-4

85. திருக்காரேணச் சிவக் கொழுந்தைச் சென்று பணிந்து சிந்தையினை 3832-1
உருக்கு ஆர்வச் செம்தமிழ் மாலை சாத்திச் சில நாள் உறைந்து போய் 3832-2
பெருக்கார் உலவு சடைமுடியார் இடங்கள் பலவும் பணிந்து ஏத்தி 3832-3

அருள் காரணர் தம் திருமறைக்காடு அணைந்தார் சேரர் ஆரூரர் 3832-4

86. முந்நீர் வலம் கொள் மறைக்காட்டு முதல்வர் கோயில் சென்று இறைஞ்சி 3833-1
செம்நீர் வாய்மைத் திருநாவுக்கரசும் புகலிச் சிவக் கன்றும் 3833-2
அந்நேர் திறக்க அடைக்க எனப்பாடும் திருவாயிலை அணைந்து 3833-3
நல்நீர் பொழியும் விழியினர் ஆய் நாயன் மாரை நினைந்து இறைஞ்சி 3833-4

87. நிறைந்த மறைகள் அர்ச்சித்த நீடு மறைக்காட்டு அருமணியை 3834-1
இறைஞ்சி வீழ்ந்து பணிந்து எழுந்து போற்றி யாழைப் பழித்து என்னும் 3834-2
அறைந்த பதிகத் தமிழ் மாலை நம்பி சாத்த அருள் சேரர் 3834-3
சிறந்த அந்தாதியில் சிறப்பித்து அனவே ஓதித் திளைத்து எழுந்தார் 3834-4

88. எழுந்து பணிந்து புறத்து எய்தி இருவர் பெரும் தொண்டரும் சில நாள் 3835-1
செழும் தண் பழனப் பதி அதனுள் அமர்ந்து தென்பால் திரைக் கடல் நஞ்சு 3835-2
அழுந்து மிடற்றார் அகத்தியான் பள்ளி இறைஞ்சி அவிர் மதியக் 3835-3
கொழுந்து வளர் செம் கடைக் குழகர் கோடிக் கோயில் குறுகினார் 3835-4

89. கோடிக் குழகர் கோயில் அயல் குடிகள் ஒன்றும் புறத்து எங்கும் 3836-1
நாடிக் காணாது உள்புக்கு நம்பர் பாதம் தொழுது உள்ளம் 3836-2
வாடிக் கடிதாய்க் கடல் காற்று என்று எடுத்து மலர்க் கண்ணீர் வாரப் 3836-3
பாடிக் காடு காள் புணர்ந்த பரிசும் பதிகத்து இடை வைத்தார் 3836-4

90. அங்கு வைகிப் பணிந்து அருளால் போவார் அகன் கோணாட்டு அரனார் 3837-1
தங்கும் இடங்கள் வணங்கிப் போய் பாண்டி நாடுதனைச் சார்ந்து 3837-2
திங்கள் முடியார் திருப்புத்தூர் இறைஞ்சி போந்து சேண் விளங்கும் 3837-3
மங்குல் தவழும் மணிமாட மதுரை மூதூர் வந்து அணைந்தார் 3837-4

91. சேரமான் தோழரும் அச் சேரர் பிரானும் பணிப்பூண் 3838-1
ஆரம் ஆர் மார்பரை ஆலவாயினில் வணங்க 3838-2
வாரமா வந்து அணைய வழுதியார் மனக்காதல் 3838-3
கூரம் மாநகர் கோடித்து எதிர் கொண்டு கொடு புக்கார் 3838-4

92. தென்னவர் கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே 3839-1
தென் மதுரை நகரின் கண் இனிது இருந்த சோழனார் 3839-2
அன்னவர்கள் உடன் கூட அனைய அவரும் கூடி 3839-3
மன்னு திரு ஆலவாய் மணிக் கோயில் வந்து அணைந்தார் 3839-4

93. திரு ஆலவாய் அமர்ந்த செம் சடையார் கோயில் வலம் 3840-1
வருவார் முன் வீழ்ந்து இறைஞ்சி வன்தொண்டர் வழித்தொண்டு 3840-2
தருவாரைப் போற்றி இசைத்துத் தாழ்ந்து எழுந்து வாழ்ந்த தமிழ் 3840-3
பெரு வாய்மை மலர் புனைந்து பெரு மகிழ்ச்சி பிறங்கினார் 3840-4

94. படி ஏறு புகழ்ச் சேரர் பெருமானும் பார் மிசை வீழ்ந்து 3841-1
அடியேனைப் பொருள் ஆக அளித்த திருமுகக் கருணை 3841-2
முடிவு ஏது என்று அறிந்திலேன் என மொழிகள் தடுமாறக் 3841-3
கடியேறு கொன்றையார் முன் பரவிக் களி கூர்ந்தார் 3841-4

95. செம்பியனார் உடன் செழியர் தாம் பணிந்து சேரர் உடன் 3842-1
நம்பியும் முன் புறத்து அணைய நண்ணிய பேர் உவகையால் 3842-2
உம்பர்பிரான் கோயிலின் இன்று உடன் கொண்டுபோய் இருவர்க்கும் 3842-3
பைம்பொன் மணி மாளிகையில் குறை அறுத்தார் பஞ்சவனார் 3842-4

96. உளம் மகிழக் கும்பிட்டு அங்கு உறையும் நாள் உதியர் உடன் 3843-1
கிளர் ஒளிப் பூண் வன் தொண்டர் தாம் இருந்த இடம் கெழுமி 3843-2
வளவனார் மீனவனார் வளம் பெருக மற்று அவரோடு 3843-3
அளவளாவிய விருப்பால் அமர்ந்து கலந்து இனிது இருந்தார் 3843-4

97. அந் நாளில் மதுரை நகர் மருங்கு அரனார் அமர் பதிகள் 3844-1

பொன் ஆரம் அணி மார்பில் புரவலர் மூவரும் போதச் 3844-2
செம் நாவின் முனைப்பாடித் திருநாடர் சென்று இறைஞ்சிச் 3844-3
சொல் மாலைகளும் சாத்தித் தொழத் திருப்பூவணத்தை அணைந்தார் 3844-4

98. நீடு திருப் பூவணத்துக் அணித்து ஆக நேர் செல்ல 3845-1
மாடு வரும் திருத்தொண்டர் மன்னிய அப் பதிகாட்டத் 3845-2
தேடு மறைக்கு அரியாரைத் திருடையார் என்று எடுத்துப் 3845-3
பாடி இசையில் பூவணம் மீதோ என்று பணிந்து அணைவார் 3845-4

99. சென்று திருப் பூவணத்துத் தேவர் பிரான் மகிழ் கோயில் 3846-1
முன்றில் வலம் கொண்டு இறைவர் முன் வீழ்ந்து பணிந்து எழுந்து 3846-2
நின்று பரவிப்பாடி நேர் நீக்கி உடன் பணிந்த 3846-3
வென்றி முடி வேந்தருடன் போந்து அங்கண் மேவினார் 3846-4

100. அப்பதியில் அமர்ந்து இறைஞ்சிச் சில நாளில் ஆரூரர் 3847-1
முப்பெரும் வேந்தர்களோடு முதன் மதுரை நகர் எய்தி 3847-2
மெய்ப் பரிவில் திருவால வாயுடையார் விரை மலர்த்தாள் 3847-3
எப்பொழுதும் பணிந்து ஏத்தி இன்பு உற்று அங்கு அமர்கின்றார் 3847-4

101. செம் சடையார் திருவாப்பனூர் திருவேடகம் முதல் ஆம் 3848-1
நஞ்சு அணியும் கண்டர் அவர் நயந்த பதி நண்ணியே 3848-2
எஞ்சல் இலாக் காதலினால் இனிது இறைஞ்சி மீண்டு அணைந்து 3848-3
மஞ்சு அணையும் மதில் மதுரை மாநகரில் மகிழ்ந்து இருந்தார் 3848-4

102. பரமர் திருப்பரம் குன்றில் சென்று பார்த்திபர் ஓடும் 3849-1
புரம் எரித்தார் கோயில் வலம் கொண்டு புகுந்து உள் இறைஞ்சிச் 3849-2
சிரமலிமாலைச் சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும் 3849-3
அருமை நினைந்து அஞ்சுதும் என்று ஆரூரர் பாடுவார் 3849-4

103. கோத்திட்டை என்று எடுத்துக் கோது இல் திருப்பதிக இசை 3850-1
மூர்த்தியார் தமை வணங்கி முக்கோக்கள் உடன் முன்பே 3850-2
ஏத்திய வண் தமிழ் மாலை இன் இசைப் பாடிப் பரவி 3850-3
சாத்தினார் சங்கரனார் தங்கு திருப்பரம் குன்றில் 3850-4

104. இறைவர் திருத்தொண்டு புரி அருமையினை இரு நிலத்து 3851-1
முறை புரியும் முதல் வேந்தர் மூவர்களும் கேட்டு அஞ்சி 3851-2
மறை முந் நூல் மணி மார்பின் வன்தொண்டர் தமைப் பணிந்தார் 3851-3
நிறை தவத்தோர் அப்பாலும் நிருத்தர் பதி தொழ நினைந்தார் 3851-4

105. அந் நாட்டுத் திருப்பதிகள் பலவும் அணைந்து இறைஞ்சமலை 3852-1
நல் நாட்டு வேந்தருடன் நம்பிதாம் எழுந்து அருள 3852-2
மின் நாட்டும் பல் மணிப்பூண் வேந்தர் இருவரும் மீள்வார் 3852-3
தென் நாட்டு வேண்டுவன செய்து அமைப்பார் தமை விடுத்தார் 3852-4

106. இரு பெரு வேந்தரும் இயல்பின் மீண்ட பின் எழுந்து அருளும் 3853-1
பொரு அரும் சீர் வன்தொண்டர் புகழ்ச் சேரர் உடன் புனிதர் 3853-2
மருவிய தானம் பலவும் பணிந்து போய் மலைச்சாரல் 3853-3
குருமணிகள் வெயில் எறிக்கும் குற்றாலம் சென்று அடைந்தார் 3853-4

107. குற்றாலத்து இனிது அமர்ந்த கூத்தர் குரை கழல் வணங்கிச் 3854-1
சொல்தாம மலர் புனைந்து குறும் பலாத் தொழுது இப்பால் 3854-2
முற்றா வெண்மதி முடியார் பதிபணிந்து மூ எயில்கள் 3854-3
செற்றார் மன்னிய செல்வத் திருநெல் வேலியை அணைந்தார் 3854-4

108. நெல்வேலி நீற்று அழகர் தமைப் பணிந்து பாடி நிகழ் 3855-1
பல்வேறு பதி பிறவும் பணிந்து அன்பால் வந்து அணைந்தார் 3855-2
வில்வேடராய் வென்றி விசயன் எதிர் பன்றிப் பின் 3855-3
செல் வேத முதல்வர் அமர் திரு இராமேச்சரத்து 3855-4

109. மன்னும் இராமேச்சரத்து மாமணியை முன் வணங்கிப் 3856-1
பன்னும் தமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பு அணிந்த 3856-2
சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீசரம் சார்ந்த 3856-3
சொல்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுது அமர்ந்தார் 3856-4

110. திரு இராமேச்சரத்துச் செழும் பவளச் சுடர்க் கொழுதைப் 3857-1
பரிவினால் தொழுது அகன்று பரமர் பிற பணிந்து 3857-2
பெருவிமானத்து இமையோர் வணங்கும் பெரும் திருச்சுழியல் 3857-3
மருவினார் வன்தொண்டர் மலை வேந்தருடன் கூட 3857-4

111. திருச்சுழியல் இடம் கொண்ட செம்பொன் மலைச் சிலையாரைக் 3858-1
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல் விடத்தின் 3858-2
இருள் சுழியும் மிடற்றாரை இறைஞ்சி எதிர் இதழி மலர்ப் 3858-3
பருச் சுழியத்துடன் ஊனாய் உயிர் எனும் பா மலர் புனைந்தார் 3858-4

112. அங்கணரைப் பணிந்து உறையும் ஆரூரர்க்கு அவ்வூரில் 3859-1
கங்குல் இடைக் கனவின் கண் காளை ஆம் திருவடிவால் 3859-2
செம்கையினில் பொன் செண்டும் திருமுடியில் சுழியம் உடன் 3859-3
எங்கும் இலாத் திருவேடம் என்பு உருக முன்காட்டி 3859-4

113. கானப் பேர் யாம் இருப்பது எனக் கழறி கங்கை எனும் 3860-1
வானப் பேர் ஆறும் உலவும் மா முடியார் தாம் அகல 3860-2
ஞானப் பேர் ஆளர் உணர்ந்து அதிசயித்து நாகம் உடன் 3860-3
ஏனப் பேர் எயிறு அணிந்தார் அருள் இருந்த பரிசு என்பார் 3860-4

114. கண்டு அருளும் படி கழற்றறிவார்க்கு மொழிந்து அருளிப் 3861-1
புண்டரிகப் புனல் சுழியல் புனிதர் கழல் வணங்கிப் போய் 3861-2
அண்டர் பிரான் திருக்கனப்பேர் அணைவார் ஆரூரர் 3861-3
தொண்டர் அடித் தொழலும் எனும் சொல் பதிகத் தொடை புனைவார் 3861-4

115. காளையார் தமைக் கண்டு தொழப் பெறுவது என் என்று 3862-1
தாளை நாளும் பரவத் தருவார் பால் சார்கின்றார் 3862-2
ஆளை நீள் இடைக் காண அஞ்சிய நீர் நாய் அயலே 3862-3
வாளைபாய் நுழைப் பழன முனைப்பாடி வள நாடார் 3862-4

116. மன்னு திருக்கானப் பேர் வளம் பதியில் வந்து எய்தி 3863-1
சென்னி வளர்மதி அணிந்தார் செழும் கோயில் வலம் கொண்டு 3863-2
முன் இறைஞ்சி உள் அணைந்து முதல்வர் சேவடி தாழ்ந்து 3863-3
பன்னு செழும் தமிழ் மாலை பாடினார் பரவினார் 3863-4

117. ஆராத காதலுடன் அப்பதியில் பணிந்து ஏத்திச் 3864-1
சீர் ஆரும் திருத்தொண்டர் சில நாள் அங்கு அமர்ந்து அருளிக் 3864-2
கார் ஆரும் மலர்ச்சோலைக் கானப் பேர் கடந்து அணைந்தார் 3864-3
போர் ஆன் ஏற்றார் கயிலைப் பொருப்பர் திருப்புனவாயில் 3864-4

118. புனல் வாயில் பதி அமர்ந்த புனிதர் ஆலயம் புக்கு 3865-1
மனம் ஆர்வம் உறச் சித்த நீ நினை என் ஒடு என்றே 3865-2
வின வான தமிழ் பாடி வீழ்ந்து இறைஞ்சி அப்பதியில் 3865-3
சின ஆனை உரித்து அணிந்தார் திருப்பாதம் தொழுது இருந்தார் 3865-4

119. திருப்புன வாயில் பதியில் அமர்ந்த சிவனார் மகிழும் 3866-1
விருப்பு உடைய கோயில் பல பணிந்து அருளால் மேவினார் 3866-2
பொருப்பின் ஓடு கான் அகன்று புனல் பொன்னி நாடு அணைந்து 3866-3
பருப்பத வார் சிலையார் தம் பாம்பு அணிமா நகர் தன்னில் 3866-4

120. பாதாள ஈச்சரம் இறைஞ்சி அதன் மருங்கு பல பதியும் 3867-1
வேத ஆதி நாதர் கழல் வணங்கி மிகு விரைவின் உடன் 3867-2

சூது ஆரும் துணை முலையார் மணிவாய்க்குத் தோற்று இரவு 3867-3
சே ஆம்பல் வாய் திறக்கும் திருவாரூர் வந்து அணைந்தார் 3867-4

121. திருநாவலூர் வேந்தர் சேரர் குல வேந்தர் உடன் 3868-1
வருவாரைத் திருவாரூர் வாழ்வார்கள் எதிர்கொள்ளத் 3868-2
தரும் காதலுடன் வணங்கித் தம் பெருமான் கோயிலின் உள் 3868-3
பெருகு ஆர்வத்து ஒடு விரும்பும் பெரும் பேறு பெறப் புகுந்தார் 3868-4

122. வாச மலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலம் கொண்டு 3869-1
நேசம் உற முன் இறைஞ்சி நெடும் பொழுது எலாம் பரவி 3869-2
ஏசறவு ஆல் திருப்பதிகம் எடுத்து ஏத்தி எழுந்து அருளால் 3869-3
பாச வினைத் தொடக்கு அறுப்பார் பயில் கோயில் பணிந்து அணைவார் 3869-4

123. பரவையார் மாளிகையில் பரிசனங்கள் முன் எய்த 3870-1
விரவு பேர் அலங்கார விழுச் செல்வம் மிகப் பெருக 3870-2
வரவு எதிர் கொண்டு அடிவணங்க வன் தொண்டர் மலைநாட்டுப் 3870-3
புரவலனாரையும் கொண்டு பொன் அணி மாளிகை புகுந்தார் 3870-4

124. பரவியே பரவையார் பரிவு உடனே பணிந்து ஏத்தி 3871-1
விரவிய போனகங்கம் கறிகள் விதம் பலவாகச் சமைத்துப் 3871-2
பரிகலமும் பாவாடை பகல் விளக்கும் உடன் அமைத்துத் 3871-3
திரு அமுது செய்வித்தார் திருந்திய தேன் மொழியினார் 3871-4

125. மங்கம் ஆம் பூசனைகள் பரவையார் செய மகிழ்ந்து 3872-1
தங்கி இனிது அமர் கின்றார் தம்பிரான் கோயிலின் உள் 3872-2
பொங்கு பெரும் காலம் எலாம் புக்கு இறைஞ்சி புறத்து அணைந்து 3872-3
நங்கள் பிரான் அருள் மறவா நல் விளையாட்டினை நயந்தார் 3872-4

126. நிலைச் செண்டும் பரிச் செண்டும் வீசி மிக மகிழ்வு எய்தி 3873-1
விலக்கு அரும் போர்த் தகர்ப் பாய்ச் சல் கண்டு அருளி வென்றி பெற 3873-2
மலைக்கு நெடு முள் கணைக்கால் வராணப் போர் மகிழ்ந்து அருளி 3873-3
அலைக்கும் அறப் பல புள்ளின் அமர் விரும்பி அமர்கின்றார் 3873-4

127. விரவு காதல் மீக்கூர மேவும் நாள்கள் பல செல்லக் 3874-1
கரவு இல் ஈகைக் கேரளனார் தங்கள் கடல் சூழ் மலை நாட்டுப் 3874-2
பரவையார் தம் கொழுநனார் தம்மைப் பணிந்து கொண்டு அணை 3874-3
இரவும் பகலும் தொழுது இரக்க இசைந்தார் அவரும் எழுந்து அருள 3874-4

128. நங்கை பரவையார் உள்ளத்து இசைவால் நம்பி எழுந்து அருளத் 3875-1
திங்கள் முடியார் திரு அருளைப் பரவிச் சேரமான் பெருமாள் 3875-2
எங்கும் உள்ள அடியாருக்கு ஏற்ற பூசை செய்து அருளிப் 3875-3
பொங்கும் முயற்சி இருவரும் போய்ப் புக்கார் புனிதர் பூம் கோயில் 3875-4

129. தம்பிரானைத் தொழுது அருளால் போந்து தொண்டர் சார்ந்து அணைய 3876-1
நம்பி ஆருரரும் சேர நல்நாட்டு அரசனார் ஆய 3876-2
பைம் பொன் மணி நீள் முடிக் கழறிற் அறிவார் தாமும் பயணம் உடன் 3876-3
செம்பொன் நீடு மதில் ஆரூர் தொழுது மேல் பால் செல்கின்றார் 3876-4

130. பொன் பரப்பி மணிவர் இன்றி புனல் பரக்கும் காவேரித் 3877-1
தென் கரை போய்ச் சிவன் மகிழ்ந்த கோயில் பல சென்று இறைஞ்சி 3877-2
மின் பரப்பும் சடை அண்ணல் விரும்பும் திருக் கண்டியூர் 3877-3
அன்பு உருக்கும் சிந்தை உடன் பணிந்து புறத்து அணைந்தார்கள் 3877-4

131. வட கரையில் திருவையாறு எதிர் தோன்ற மலர்க் கரங்கள் 3878-1
உடல் உருக உள் உருக உச்சியின்மேல் குவித்து அருளிக் 3878-2
கடல் பரந்தது எனப் பெருகும் காவிரியைக் கடந்து ஏறித் 3878-3
தொடர்வு உடைய திருவடியை தொழுவதற்கு நினைவுற்றார் 3878-4

132. ஐயாறு அதனைக் கண்டு தொழுது அருள ஆரூர் தமை நோக்கி 3879-1
செய்யாள் பிரியாச் சேரமான் பெருமாள் அருளிச் செய்கின்றார் 3879-2
மை ஆர் கண்டர் மருவு திரு ஐயாறு இறைஞ்ச மனம் உருகி 3879-3
நையா நின்றது இவ்வாறு கடந்து பணிவோம் நாம் என்ன 3879-4

133. ஆறு பெருகி இரு கரையும் பொருது விசும்பில் எழுவது போல் 3880-1
வேறு நாவாய் ஓடங்கள் மீது செல்லா வகை மிகைப்ப 3880-2
நீறு விளங்கும் திருமேனி நிறுத்தர் பாதம் பணிந்தபின் 3880-3
ஆறு நெறியாச் செலவுரியார் தரியாது அழைத்துப் பாடுவார் 3880-4

134. பரவும் பரிசு ஒன்று எடுத்து அருளிப் பாடும் திருப்பாட்டின் முடிவில் 3881-1
அரவம் புனைவார் தமை ஐயாறு உடைய அடிகளோ என்று 3881-2
விரவும் வேட்கை உடன் அழைத்து விளங்கும் பெருமைத் திருப்பதிகம் 3881-3
நிரவும் இசையில் வன்தொண்டர் நின்று தொழுது பாடுதலும் 3881-4

135. மன்றில் நிறைந்து நடமாட வல்லார் தொல்லை ஐயாற்றில் 3882-1
கன்று தடை உண்டு எதிர் அழைக்க கதறிக் கனைக்கும் புனிற்று ஆ 3882-2
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாம் கேட்க ஓலம் என 3882-3
நின்று மொழிந்தார் பொன்னி மா நதியும் நீங்கி நெறி காட்ட 3882-4

136. விண்ணின் முட்டும் பெருக்கு ஆறு மேல்பால் பளிக்கு வெற்பு என்ன 3883-1
நண்ணி நிற்கக் கீழ்பால் நீர் வடிந்த நடுவு நல்லவழிப் 3883-2
பண்ணிக் குளிர்ந்த மணல் பரப்பக் கண்டதொண்டர் பயில் மாரி 3883-3
கண்ணில் பொழிந்து மயிர்ப் புளகம் கலக்கக் கை அஞ்சலி குவித்தார் 3883-4

137. நம்பி பாதம் சேரமான் பெருமாள் பணிய நாவலூர் 3884-1
செம்பொன் முந்நூல் மணிமார்பர் சேரர் பெருமான் எதிர் வணங்கி 3884-2
உம்பர் நாதர் உமக்கு அளித்தது அன்றோ என்ன உடன் மகிழ்ந்து 3884-3
தம்பிரானைப் போற்றி இசைத்து தடம் காவேரி நடு அணைந்தார் 3884-4

138. செம் சொல் தமிழ் நாவலர் கோனும் சேரர் பிரானும் தம் பெருமான் 3885-1
எஞ்சல் இல்லா நிறை ஆற்றின் இடையே அளித்த மணல் வழியில் 3885-2
தஞ்சம் உடைய பரிசனமும் தாமும் ஏறித் தலைச்சென்று 3885-3
பஞ்ச நதி வாணரைப் பணிந்து விழுந்தார் எழுந்தார் பரவினார் 3885-4

139. அம் கண் அரனார் கருணையினை ஆற்றாது ஆற்றித் திளைத்து இறைஞ்சித் 3886-1
தங்கள் பெருமான் திரு அருளால் தாழ்ந்து மீண்டும் தடம்பொன்னித் 3886-2
பொங்கு நதியின் முன் வந்த படியே நடுவு போந்து ஏறத் 3886-3
துங்க வரை போல் நின்ற நீர் துரந்து தொடரப் பெருகியது ஆல் 3886-4

140. ஆய செயலின் அதிசயத்தைக் கண்ட கரையில் ஐயாறு 3887-1
மேய பெருமாள் அருள் போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பால் போய்த் 3887-2
தூய மதிவாழ் சடையார் தம் பதிகள் பிறவும் தொழுது ஏத்திச் 3887-3
சேய கொங்க நாடு அணைந்தார் திருவாரூரர் சேரர் உடன் 3887-4

141. கொங்கு நாடு கடந்து போய்க் குலவு மலைநாட்டு எல்லை உற 3888-1
நங்கள் பெருமான் தோழனார் நம்பி தம்பிரான் தோழர் 3888-2
அம் கண் உடனே அணை எழுந்து அருளா நின்றார் எனும் விருப்பால் 3888-3
எங்கும் அந் நாட்டு உள்ளவர்கள் எல்லாம் எதிர்கொண்டு இன்பு உறுவர் 3888-4

142. பதிகள் எங்கும் தோரணங்கள் பாங்கர் எங்கும் பூவனங்கள் 3889-1
வதிகள் எங்கும் குளிர் பந்தர் மனைகள் எங்கும் அகில் புனக்கார் 3889-2
நதிகள் எங்கும் மலர்ப் பிறங்கல் ஞாங்கர் எங்கும் ஓங்குவன 3889-3
வீதிகள் எங்கும் முழவின் ஒலி நிலங்கள் எங்கும் பொலம் சுடர் பூ 3889-4

143. திசைகள் தோறும் வரும் பெருமை அமைச்சர் சேனைப் பெருவெள்ளம் 3890-1
குசை கொள் வாசி நிரை வெள்ளம் கும்ப யானை அணி வெள்ளம் 3890-2

மிசை கொள் பண்ணும் பிடிவெள்ளம் மேவும் சோற்று வெள்ளம் கண்டு 3890-3
அசைவு இல் இன்பப் பெருவெள்ளத்து அமர்ந்து கொடுங் கோளூர் அணைந்தார் 3890-4

144. கொடுங்கோ ளூரின் மதில் வாயில் அணி கோடித்து மருகில் உடுத்து 3891-1
தொடும் கோபுரங்கள் மாளிகைகள் குளிர் குளிர் சாலைகள் தெற்றி 3891-2
நெடும் கோ நகர்கள் ஆடல் அரங்கு நிரந்த மணித் தாமம் கமுக 3891-3
விடும் கோதைப் பூந் தாமங்கள் நிரைத்து வெவ்வேறு அலங்கரித்து 3891-4

145. நகர மாந்தர் எதிர் கொள்ள நண்ணி எண் இல் அரங்கு தொறும் 3892-1
மகர குழை மாதர்கள் பாடி ஆட மணி வீதியில் அணைவார் 3892-2
சிகர நெடும் மாளிகை அணையார் சென்று திருவஞ்சைக் களத்து 3892-3
நிகர் இல் தொண்டர் தமைக் கொண்டு புகுந்தார் உதியர் நெடும் தகையார் 3892-4

146. இறைவர் கோயில் மணி முன்றில் வலம் கொண்டு இறைஞ்சி எதிர்புக்கு 3893-1
நிறையும் காதல் உடன் வீழ்ந்து பணிந்து நேர் நின்று ஆரூரர் 3893-2
முறையில் விளம்பும் திருப்பதிகம் முடிப்பது கங்கை என்று எடுத்துப் 3893-3
பிறை கொள் முடியார் தமைப்பாடி பரவிப் பெருமாளுடன் தொழுதார் 3893-4

147. தொழுது தினைத்துப் புறம் போந்து தோன்றப் பண்ணும் பிடி மேல் பார் 3894-1
முழுதும் ஏத்த நம்பியை முன் போற்றிப் பின்பு தாம் ஏறிப் 3894-2
பழுதுஇல் மணிச் சாமரை வீசிப் பைம்பொன் மணி மாளிகையில் வரும் 3894-3
பொழுது மறுகில் இருபுடையும் மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார் 3894-4

148. நல்ல தோழர் நம் பெருமாள் தமக்கு நம்பி இவர் என்பார் 3895-1
எல்லை இல்லாத் தவம் முன்பு என் செய்தோம் இவரைத் தொழ என்பார் 3895-2
செல்வம் இனி என் பெறுவது நம் சிலம்பு நாட்டுக்கு என உரைப்பார் 3895-3
சொல்லும் தரமோ பெருமாள் செய் தொழிலைப் பாரீர் எனத் தொழுவார் 3895-4

149. பூவும் பொரியும் பொன் துகளும் பணிவார் பொருவு இல் இவர் 3896-1
மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலதம் என வியப்பார் 3896-2
பாவும் துதிகள் எம் மருங்கும் பயில வந்து மாளிகையின் 3896-3
மாவும் களிறும் நெருங்கும் மணி வாயில் புகுந்து மருங்கு இழிந்தார் 3896-4

150. கழற்றிற் அறியும் திருவடியும் கலை நாவலர் தம் பெருமான் ஆம் 3897-1
முழவில் பொலியும் திரு நெடும் தோள் முனைவர் தம்மை உடன் கொண்டு 3897-2
விழவில் பொலியும் மாளிகையில் விளங்கு சிங்காசனத்தின் மிசை 3897-3
நிழல் திக்கு ஒளிரும் பூணாரை இருத்தித் தாமும் நேர் நின்று 3897-4

151. செம்பொன் கரக வாச நீர் தேவிமார்கள் எடுத்து ஏத்த 3898-1
அம்பொன் பாதம் தாம் விளக்கி அருளப் புகலும் ஆரூரர் 3898-2
தம்பொன் தாளை வாங்கி இது தகாது என்று அருளத் தரணியில் வீழ்ந்து 3898-3
எம் பெற்றிமையால் செய்தன இங்கு எல்லாம் இசைய வேண்டும் என 3898-4

152. பெருமாள் வேண்ட எதிர் மறுக்க மாட்டார் அன்பில் பெரும் தகையார் 3899-1
திருமா நெடும் தோள் உதியர் பிரான் செய்த எல்லாம் கண்டு இருந்தார் 3899-2
அருமானம் கொள் பூசனைகள் அடைவே எல்லாம் அளித்து அதன்பின் 3899-3
ஒருமா மதிவெண்குடை வேந்தர் உடனே அமுது செய்து வந்தார் 3899-4

153. சேரர் உடனே திருவமுது செய்த பின்பு கை கோட்டி 3900-1
ஆரம் நறும் மென் கலவை மான் மதச் சாந்து ஆடை அணிமணிப் பூண் 3900-2
ஈர விரை மென்மலர்ப் பணிகள் இனைய முதல் ஆயின வருக்கம் 3900-3
சார எடுத்து வன் தொண்டர் சாத்தி மிகத் தமக்கு ஆக்கி 3900-4

154. பாடல் ஆடல் இன்னியங்கள் பயில்தல் முதலாம் பண்ணையினில் 3901-1
நீடும் இனிய விநோதங்கள் நெருங்கு காலம் தொறும் நிகழ 3901-2
மாடு விரைப்பூம் அரும் மணம்செய் ஆராமங்கள் வைகுவித்துக் 3901-3
கூட முனைப் பாடியார் கோவை கொண்டு மகிழ்ந்தார் கோதையார் 3901-4

155. செண்டு ஆடும் தொழில் மகிழ்வும் சிறு சோற்றுப் பெரும் சிறப்பும் 3902-1
வண்டாடும் மலர் வாவி மருவிய நீர் விளையாட்டும் 3902-2
தண் தாமும் மத கும்பத் தட மலைப்போர் சல மற்போர் 3902-3
கண்டு ஆரா விருப்பு எய்தக் காவலனார் காதல் செய்நாள் 3902-4

156. நாவலர் தம் பெருமானும் திருவாரூர் நகர் ஆளும் 3903-1
தேவர் பிரான் கழல் ஒரு நாள் மிக நினைந்த சிந்தையர் ஆய் 3903-2
ஆவியை ஆரூரானை மறக்கலும் ஆமே என்னும் 3903-3
மேவிய சொல் திருப்பதிகம் பாடியே வெருவுற்றார் 3903-4

157. திருவாரூர் தனை நினைந்து சென்று தொழுவேன் என்று 3904-1
மரு ஆர்வத் தொண்டர் உடன் வழி கொண்டு செல்போதில் 3904-2
ஒருவா நண் புள்ளுக உடன் எழுந்து கை தொழுது 3904-3
பெருவான வரம்பனார் பிரிவு ஆற்றார் பின் செல்வார் 3904-4

158. வன் தொண்டர் முன் எய்தி மனம் அழிந்த உணர்வினர் ஆய் 3905-1
இன்று உமது பிரிவு ஆற்றேன் என் செய்கேன் யான் என்ன 3905-2
ஒன்றுநீர் வருந்தாதே உமது பதியின் கண் இருந்து 3905-3
அன்றினார் முனை முருக்கி அரசு ஆளும் என மொழிந்தார் 3905-4

159. ஆரூரர் மொழிந்து அருள அது கேட்ட அருள் சேரர் 3906-1
பாரோடு விசும்பு ஆட்சி எனக்கு உமது பாதமலர் 3906-2
தேர் ஊரும் நெடும் வீதித் திருவாரூர்க்கு எழுந்து அருள 3906-3
நேர் ஊரும் மனக் காதல் நீக்கவும் அஞ்சுவன் என்றார் 3906-4

160. மன்னவனார் அது மொழிய வன்தொண்டர் எதிர் மொழிவார் 3907-1
என் உயிருக்கு இன் உயிராம் எழில் ஆரூர்ப் பெருமானை 3907-2
வன் நெஞ்சக் கள்வனேன் மறந்து இரேன் மதி அணிந்தார் 3907-3
இன் அருளால் அரசு அளிப்பீர் நீர் இருப்பீர் என இறைஞ்ச 3907-4

161. மற்று அவரும் பணிந்து இசைந்தே மந்திரிகள் தமை அழைத்து 3908-1
பொற்பு நிறை தொல் நகரில் இற்றைக்கு முன்பு புகுந்த 3908-2
நற்பெரும் பண்டார நானா வருக்கம் ஆன வெலாம் 3908-3
பல் பலராம் ஆளின் மிசை ஏற்றிவரப் பண்ணும் என 3908-4

162. ஆங்கு அவரும் அன்று வரை ஆயம் ஆகிய தனங்கள் 3909-1
ஓங்கிய பொன் நவ மணிகள் ஒளிர் மணிப்பூண் துகில் வருத்தம் 3909-2
ஞாங்கர் நிறை விரை உறுப்பு வருக்கம் முதல் நலம் சிறப்பத் 3909-3
தாங்கு பொதி வினைஞர் மேல் தலம் மலியக் கொண்டு அணைந்தார் 3909-4

163. மற்று அவற்றின் பரப்பு எல்லாம் வன் தொண்டர் பரிசனத்தின் 3910-1
முற்படவே செலவு இட்டு முனைப்பாடித் திருநாடார் 3910-2
பொன் பதங்கள் பணிந்து அவரைத் தொழுது எடுத்துப் புணை அலங்கல் 3910-3
வெற்பு உயர் தோள் உறத் தழுவி விடை அளித்தார் வன்தொண்டர் 3910-4

164. ஆரூரர் அவர் தமக்கு விடை அருளி அங்கு அன்று 3911-1
கார் ஊரும் மலைநாடு கடந்து அருளிக் கல் சுரமும் 3911-2
நீர் ஊரும் கான் யாரும் நெடும் கானும் பலகழிய 3911-3
சீர் ஊரும் திருமுருன் பூண்டி வழிச்செல்கின்றார் 3911-4

165. திரு முருகன் பூண்டி அயல் செல்கின்ற போழ்தின் கண் 3912-1
பொருவிடையார் நம்பிக்குத் தாமே பொன் கொடுப்பதலால் 3912-2
ஒருவர் கொடுப்பக் கொள்ள ஒண்ணாமைக்கு அதுவாங்கிப் 3912-3
பெருக அருளால் தாம் கொடுக்கப் பெறுவதற்கோ அது அறியோம் 3912-4

166. வென்றி மிகு பூதங்கள் வேடர் வடிவாய் சென்று 3913-1
வன்தொண்டர் பண்டாரம் கவர அருள் வைத்து அருள 3913-2

அன்றினார் புரம் எரித்தார் அருளால் வேட்டுவப் படையாய்ச் 3913-3
சென்று அவர் தாம் வரும் வழியில் இருபாலும் செயிர்த்து எழுந்து 3913-4

167. வில் வாங்கி அகல் அம்பு விசை நாணில் சந்தித்துக் 3914-1
கொல்வோம் இங்கு இட்டுப்போம் எனக் கோபத்தால் குத்தி 3914-2
எல்லை இல் பண்டாரம் எல்லாம் கவர்ந்து கொள இரிந்து ஓடி 3914-3
அல்லல் உடன் பறி உண்டார் ஆரூரர் மருங்கு அணைந்தார் 3914-4

168. ஆரூரர் தம்பால் அவ் வேடுவர் சென்று அணையாதே 3915-1
நீர் ஊரும் செம் சடையார் அருளினால் நீங்க அவர் 3915-2
சேர் ஊராம் திருமுருகன் பூண்டியினில் சென்று எய்திப் 3915-3
போர் ஊரும் மழவிடையார் கோயிலை நாடிப் புக்கார் 3915-4

169. அம் கணர் தம் கோயிலினை அஞ்சலி கூப்பித் தொழுது 3916-1
மங்குல் உற நீண்ட திருவாயிலினை வந்து இறைஞ்சிப் 3916-2
பொங்கு விருப்புடன் புக்கு வலம் கொண்டு புனித நதி 3916-3
திங்கள் முடிக்கு அணிந்தவர் தம் திருமுன்பு சென்று அணைந்தார் 3916-4

170. உருகிய அன்பொடு கைகள் குவித்து விழுந்து உமைபாகம் 3917-1
மருவிய தம் பெருமான் முன் வன்தொண்டர் பாடினார் 3917-2
வெரு உறவேடுவர் பறிக்கும் வெம் சுரத்தில் எத்துக்கு இங்கு 3917-3
அருகு இருந்தீர் எனக்கு கொடுகு வெஞ்சிலை அம்சொல்பதிகம் 3917-4

171. பாடியவர் பரவுதலும் பரம்பொருளாம் அவர் அருளால் 3918-1
வேடுவர் தாம் பறித்த பொருள் அவை எல்லாம் விண்ணெருங்க 3918-2
நீடு திரு வாயிலின் முன் குவித்திடலும் நேர் இறைஞ்சி 3918-3
ஆடும் அவர் திருவருளால் அப்படியே கைக் கொண்டார் 3918-4

172. கைக்கொண்டு கொடுபோம் அக் கைவினைஞர் தமை ஏவி 3919-1
மைக் கொண்ட மிடற்றாரை வணங்கிப்போய்க் கொங்கு அன்று 3919-2
மெய்க் கொண்ட காலினால் விரைந்து ஏகி மென் கரும்பும் 3919-3
செய்க் கொண்ட சாலியும் சூழ் திருவாரூர் சென்று அணைந்தார் 3919-4

173. நாவலர் மன்னவர் அருளால் விடை கொண்ட நரபதியார் 3920-1
ஆவியின் ஒன்றா நண்பின் ஆறூரர் தமை நினைந்து 3920-2
மா அலரும் சோலை மா கோதையினில் மன்னிமலைப் 3920-3
பூவலயம் பொது நீக்கி அரசு உரிமை புரிந்து இருந்தார் 3920-4

174. இந் நிலைமை உதியர் பிரான் எம்பிரான் வன்தொண்டர் 3921-1
பொன்னி வளநாடு அகன்று மாகோதையினில் மேல் புகுந்து 3921-2
மன்னு திருக் கயிலை யினில் மத வரைமேல் எழுந்து அருள 3921-3
முன்னர் வயப் பரி உனக்கும் திருத்தொழில் பின்மொழிகின்றாம் 3921-4

175. மலை மலிந்த திருநாட்டு மன்னவனார் மா கடல் போல் 3922-1
சிலை மலிந்த கொடித் தானைச் சேரலனார் கழல் போற்றி 3922-2
நிலை மலிந்த மணிமாடம் நீள் மறுகு நான் மறை சூழ் 3922-3
கலை மலிந்த புகழ்க் காழிக் கணநாதர் திறம் உரைப்பாம் 3922-4

38 கணநாத நாயனார் புராணம்

1. ஆழி மாநிலத்து அகிலம் ஈன்று அளித்தவள் திற முலை அமுது உண்ட 3923-1
வாழி ஞான சம்பந்தர் வந்து அருளிய வளப்பினது அளப்பு இல்லா 3923-2
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்து உலகினுக்கு ஒரு முதல் ஆய் 3923-3
காழி மா நகர் திரு மறையவர் குலக் காவலர் கணநாதர் 3923-4

2. ஆய அன்பர் தாம் அணிமதில் சண்பையின் அமர் பெரும் திருத்தோணி 3924-1
நாயனார்க்கு நல் திருப்பணி ஆயின நாளும் அன்பொடு செய்து 3924-2
மேய அத் திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பி வந்து அணைவார்க்குத் 3924-3

தூய கைத் திருத் தொண்டினில் அவர் தமைத் துறை தொறும் பயில்விப்பார் 3924-4

3. நல்ல நந்தவனப் பணி செய்பவர் நறும் துணர் மலர் கெய்வோர் 3925-1
பல் பணித் தொடை புனைபவர் கொணர் திரு மஞ்சனப் பணிக்கு உள்ளோர் 3925-2
அல்லும் நன் பகலும் திரு அலகிட்டு திரு மெழுக்கு அமைப்போர் 3925-3
எல்லை இல் விளக்கு எரிப்பவர் திரு முறை எழுதுவோர் வாசிப்போர் 3925-4

4. இனைய பல்திருப் பணிகளில் அணைந்தவர்க்கு ஏற்ற அத் திருத்தொண்டின் 3926-1
வினை விளங்கிட வேண்டிய குறை எலாம் முடித்து மேவிடச் செய்தே 3926-2
அனைய அத்திறம் புரிதலில் தொண்டரை ஆக்கி அன்புறு வாய்மை 3926-3
மனை அறம் புரிந்து அடியவர்க்கு இன்பு உற வழிபடும் தொழில் மிக்கார் 3926-4

5. இப் பெரும் சிறப்பு எய்திய தொண்டர் தாம் ஏறு சீர் வளர் காழி 3927-1
மெய்ப் பெரும் திரு ஞான போனகர் கழல் மேவிய விருப்பாலே 3927-2
முப் பெரும் பொழுது அர்ச்சனை வழிபாடு மூளும் அன்பொடு நாளும் 3927-3
ஒப்பு இல் காதல் கூர் உளம் கனி சிறந்திட ஒழுகினார் வழுவாமல் 3927-4

6. ஆன தொண்டினில் அமர்ந்த பேர் அன்பரும் அகல் இடத்தினில் என்றும் 3928-1
ஞானம் உண்டவர் புண்டரீகக் கழல் அருச்சனை நலம் பெற்றுத் 3928-2
தூ நறும் கொன்றை முடியவர் சுடர் நெடும் கயிலை மால்வரை எய்தி 3928-3
மான நல் பெரும் கணம் களுக்கு நாதர் ஆம் வழித் தொண்டின் நிலை பெற்றார் 3928-4

7. உலகம் உய்ய நஞ்சு உண்டவர் தொண்டினில் உறுதி மெய் உணர்வு எய்தி 3929-1
அலகில் தொண்டருக்கு அறிவு அளித்தவர் திறம் அவனியின் மிசை ஆக்கும் 3929-2
மலர் பெரும் புகழ்ப் புகலியில் வரும் கண நாதனார் கழல் வாழ்த்தி 3929-3
குலவு நீற்று வண் கூற்றுவனார் திறம் கொள்கையின் மொழிகின்றோம் 3929-4

39 கூற்றுவ நாயனார் புராணம்

1. துன்னார் முனைகள் தோள் வலியால் வென்று சூலப் படையார் தம் 3930-1
நல்நாமம் தம் திரு நாவில் நாளும் நவிலும் நலம் மிக்கார் 3930-2
பல் நாள் ஈசர் அடியார்தம் பாதம் பரவி பணிந்து ஏத்தி 3930-3
முன் ஆகிய நல் திருத் தொண்டின் முயன்றார் களந்தை முதல்வனார் 3930-4

2. அருளின் வலியால் அரசு ஒதுங்க அவனி எல்லாம் அடிப் படுப்பார் 3931-1
பொருளின் முடிவும் காண்ப அரிய வகையால் பொலிவித்து இகல் சிறக்க 3931-2
மருளும் களிறு பாய் புரவி மணித்தேர் படைஞர் முதல் மாற்றார் 3931-3
வெருளும் கருவி நான்கு நிறை வீரச் செருக்கின் மேலார் 3931-4

3. வென்றி வினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பல முருக்கிச் 3932-1
சென்று தும்பைத் துறை முடித்தும் செருவில் வாகைத் திறம் கெழுமி 3932-2
மன்றல் மாலை மிலைந்தவர் தம் வள நாடு எல்லாம் கவர்ந்து முடி 3932-3
ஒன்றும் ஒழிய அரசர் திரு எல்லாம் உடையர் ஆனார் 3932-4

4. மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணி மா மவுலி புனைவதற்குத் 3933-1
தில்லை வாழ் அந்தணர் தம்மை வேண்டும் அவரும் செம்பியர் தம் 3933-2
தொல்லை நீடும் குல முதலோர்க்கு அன்றி சூட்டோம் முடி என்று 3933-3
நல்கார் ஆகிச் சேரலன் தன் மலை நாடு அணைய நண்ணுவார் 3933-4

5. ஒருமை உரிமைத் தில்லை வாழ் அந்தணர்கள் தம்மில் ஒரு குடியைப் 3934-1
பெருமை முடியை அருமை புரி காவல் பேணும் படி இருத்தி 3934-2
இருமை மரபும் தூயவர் தாம் சேரர் நாட்டில் எய்தியபின் 3934-3
வரும் ஐ உறவால் மனம் தளர்ந்து மன்றுள் ஆடும் கழல் பணிவார் 3934-4

6. அற்றை நாளில் இரவின் கண் அடியேன் தனக்கு முடி ஆகப் 3935-1
பெற்ற பேறு மலர் பாதம் பெறவே வேண்டும் எனப் பரவும் 3935-2

பற்று விடாது துயில் வோர்க்குக் கனவில் பாத மலர் அளிக்க 3935-3
உற்ற அருளால் அவை தாங்கி உலகம் எல்லாம் தனிப் புரந்தார் 3935-4

7. அம் பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திரு நடம் செய் 3936-1
தம்பிரானார் புவியில் மகிழ கோயில் எல்லாம் தனித் தனியே 3936-2
இம்பர் ஞாலம் களி கூர எய்தும் பெரும் பூசனை இயற்றி 3936-3
உம்பர் மகிழ அரசு அளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார் 3936-4

8. காதல் பெருமைத் தொண்டின் நிலைக் கடல் சூழ் வையம் காத்து அளித்துக் 3937-1
கோது அங்கு அகல முயல் களந்தைக் கூற்றனார் தம் கழல் வணங்கி 3937-2
நாத மறை தந்து அளித்தாரை நடைநூல் பாவில் நவின்று ஏத்தும் 3937-3
போதம் மருவிப் பொய் அடிமை இல்லாப் புலவர் செயல் புகல்வாம் 3937-4

சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி

1. தேனும் குழலும் பிழைத்த திரு மொழியாள் புலவி தீர்க்க மதி 3938-1
தானும் பணியும் பகை தீர்க்கும் சடையார் தூது தரும் திருநாள் 3938-2
கூனும் குருடும் தீர்த்து ஏவல் கொள்வார் குலவு மலர்ப் பாதம் 3938-3
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்கு ஊன் 3938-4

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page